# பாதுகாவலன்

PATHUKAVALAN


இவ்வாரவிநியோகம்[3]

| | |
|---|---|
| யாழ். O. L. R. | 111 |
| மாம்புரி (புத்தளம்) | 79 |
| பண்டிவிரிச்சான் பங்கு | 85 |
| உயிலங்குளம் பங்கு | 65 |
| தலைமன்னார் பங்கு | 60 |
| மாத்தளை பங்கு | 60 |
| பண்டத்தரிப்பு பங்கு | 50 |
| பதுளைப் பங்கு | 50 |
| நானாட்டான் பங்கு | 50 |
| தாளையடிப் பங்கு | 47 |
| வவுனியாப் பங்கு | 44 |
| அடம்பன் பங்கு | 40 |
| முருங்கன் பங்கு | 35 |
| செட்டிகுளம் பங்கு | 35 |
| விடத்தல்தீவு பங்கு | 35 |


மலர்: 115 இதழ் : 34 15-9-1989 (செப். 15—செப். 22) ரூபா 1-50—இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


வழிபாடும் அது தொடர்பான விடயங்களும் பற்றிய கறுப்பின கத். மகாநாடு 1984 முதல் ஆண்டு தோறும்

# கறுப்பின அமெரிக்ககத்தோலிக்கருக்கு

# ரோமாபுரியில் மகாநாடு

**அமெரிக்காவிலுள்ள முப்பத்திரண்டு மறைமாவட்டங்களைச் சேர்ந்த கறுப்பினக் கத்தோலிக்கரின் பிரதிநிதிகள் நவம்பர் 9 - 16 ரோமாபுரியில் மகாநாட்டில் பங்கு கொள்ளவுள்ளனர்.**

வாசிங்டன் மறைமாவட்டக் கறுப்பினக் கத்தோலிக்கரின் அலுவலகம் 1974 இல் ஆரம்பமானது. அவர்களுடன் அமெரிக்காவிலுள்ள வேறு 32 மறைவட்டங்களும் இணைந்து 1984 முதல் ஆண்டு தோறும் வழிபாடும் அது தொடர்பான விடயங்களும், பற்றிய மகாநாட்டை நடாத்தி வருகின்றனர்.

வாசிங்டன் பேராயர் கருதினல் ஜேம்ஸ் ஹிக்கியின் பேராதரவில் இயங்கிவரும் கறுப்பின அமெரிக்க கத்தோலிக்கரின் அலுவலகம் 1984 முதல் நடத்திவரும் வருடாந்த மகாநாட்டை இம்முறை ரோமாபுரியில் எதிர்வரும் நவம்பர் 9–16 வரை நடாத்தவுள்ளது.

# யாழ் ஆயரின் ஜேர்மன் வருகை

கடந்த ஆடி மாதம் 20ம் திகதி தொடக்கம் 27ம் திகதி வரை யாழ். ஆயர் பேரருட்திரு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை மேற்கு ஜேர்மன் நாட்டில் தமிழ் மக்களைச் சந்திப்பதற்காக வருகைதந்திருந்தார். 23-7-89 அன்று மேற்கு பேர்லின் நகரில் ஆயரால் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன், சிறப்பான வரவேற்பும் கலந்துரையாடலும் இடம் பெற்றது. 25-7-89 அன்று டியூரான் (Dueren) நகரில் ஆயரின் பெயர் கொண்ட புனிதராம் சந்தியோகு அப்போஸ்தலரின் திருநாள் கூட்டுத்திருப்பலி ஆயர் தலைமையில் இலங்கையிலிருந்து வருகை தந்திருந்த அருட் தந்தை சவிரி அடிகளாராலும், இங்கு அருட் தொண்டாற்றும் அருட் தந்தை ஜெயசேகரம் அடிகளாராலும் அவ் ஆலய ஜேர்மன் குருவானவராலும் ஒன்றுசேர்ந்து சிறப்பாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத்திருப்பலியின் பின் இடம்பெற்ற வரவேற்பு வைபவத்தில் 600க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். இங்கு ஆயர் உரையாற்றுகையில் விசேடமாக எம் நாட்டில் பல இன்னல்களுக்கு மத்தியில் வாழும் மக்களுக்காக இங்கு வாழும் தமிழ் மக்கள் மன்றாட வேண்டும் எனவும், இயலுமான வரை அனைவரும் தம்மால் இயன்ற உதவிகளை அங்கு வாழும் மக்களுக்கு வாரிவழங்க வேண்டுமெனவும் அன்புடன் கேட்டுக்கொண்டார். இறுதியாக ஆயருக்கு வழங்கப்பட்ட நன்றியுரையின் போது தமது தேக நிலையைக் கருத்திற்கொள்ளாது இங்கு அகதிகளாக வாழும் தமிழ் மக்களைச் சந்திக்க வேண்டுமென்ற ஆவலுடன் வருகை தந்ததையிட்டு ஆயர் அவர்கட்கு மனமார்ந்த நன்றிகள் தெரிவிக்கப்பட்டது. பலர் தத்தமது பங்குத்தளத்தின் தற்போதைய நிலை பற்றி ஆயரிடம் ஆவலுடன் கேட்டறிந்து கொண்டனர். அதன் பின் 26-7-89 அன்று சுருட்காட் (Stuttgart) நகரில் ஆயரினல் திருப்பலிப்பூசை ஒப்புக் கொடுக்கப்பட்டதுடன் சிறப்பான வரவேற்பும் அளிக்கப்பட்டது.

இத்துடன் யாழ். ஆயரின் ஜேர்மன் வருகை இனிதே நிறைவேறியது. இச் சந்திப்புக்களுக்கான ஏற்பாடுகளைச் சிறப்பான முறையில் ஒழுங்கு செய்து தந்த அருட் தந்தை ஜெயசேகரம் அடிகளாருக்கும் திருப்பலிப் பாடல்களை வெகு சிறப்பான முறையில் தொகுத்து வழங்கிய தமிழ் கத்தோலிக்கக் கலாச்சாரக் குழுவிற்கும், ஜேர்மன் வாழ் தமிழ் மக்கள் என்றும் நன்றியுடையவர்களாவர்.

செல்வி விஜிற்ரு துரைசிங்கம்
ஒபகௌசன்
மேற்கு ஜேர்மனி

## யாழ் மறைவட்ட பொதுநிலையினர் கழகத்தின் புதிய நிர்வாகம்

இக்கழகத்தின் இவ்வாண்டிற்கான பொதுக் கூட்டம் 19-08-87 இல் நடைபெற்றது. புதிய நிர்வாகக்குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு:

தலைவர்: திரு. A. S. அகஸ்ரின் (கத். ஆசிரிய சங்கத் தலைவர்—யாழ்ப்பாணம்)

உப தலைவர்: திரு. J. G. இராசேந்திரம் (கரவெட்டி.)

செயலர்: திரு. அ. சந்தியாப்பிள்ளை (மாதகல்.)

உப செயலர்: திரு. சூ. சிறில் (யாழ். நகர்.)

பொருளாளர்: திரு. A. B. ஜோர்ஜ் (புலோப்பளை)

நிர்வாகசபை உறுப்பினர்: 1. திரு தே. சூசைநாயகம் (தருமபரம்—கிளிநொச்சி வட்டாரத் தலைவர்)

2. திரு. A. மரியநாயகம் (சில்லாலை—இளவாலை வட்டாரத் தலைவர்.

3. திரு. S. யேசுதாசன் (முள்ளியவளை )

4. திருமதி. C. A. S. செல்வநாயகம் (மிருசுவில்)

பல வருடங்களாக இக்கழகத்தில் தலைவர் பதவி வகித்து பொறுப்போடும், அர்ப்பணிப்போடும் அயராது பணிபுரிந்த வைத்தியக் கலாநிதி—J. P. C. பிலிப்ஸிக்கு விசேச பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன.

அ. சந்தியாப்பிள்ளை
செயலர்.

1989—09—12.

அண்மையில் வடக்கிற்கு விஜயம் செய்த

## அ. ம. தியாகிகளின் உயர் சிரேஷ்டர் அதிவண. மாசலோ சாகோ

**அடிகளாருடனான செவ்வி**

**செவ்வி கண்டவர் திரு. சந்தியாப்பிள்ளை**

கேள்வி: உங்களுடையசபைக்கென அதன் ஸ்தாபகரின் தனித்துவமான நோக்கங்களும், செயற்பாடுகளும் எவை? அவை இன்றைய சூழலுக்கும். சமூகத்திற்கும் பொருத்தமானவைகளாக, கருத்துள்ளவைகளாக இருக்கின்றனவா?

பதில்: இதற்கு ஒரே பதில் கூறமுடியாது ஏனெனில் அமலமரித்தியாகிகள் உலகளாவிய ரீதியில் வேறுபட்ட சூழ்நிலைகளில் பணிபுரிகிறார்கள். ஆனாலும் ஸ்தாபகருடைய இரு பிரதான நோக்குகளும் எக்காலத்துக்கும் பொருத்தமானவைகளாக இருக்கின்றன.

1. விசுவாசத்தை இழந்தவர்களுக்கும் கைவிடப்பட்ட கிறிஸ்தவர்களுக்கும் நற்செய்தியை மீள் அளித்தல்.

2. பிறமறைசார் சமூகங்களில் எமது பிரசன்னம்.

முதலாவது கடந்த காலங்களைவிட இன்று மிகவும் காத்திரமானதாக உணரப்படுகிறது. உ+ம்:இலங்கையைப் போன்றதொரு சூழலில் பாரம்பரியம் மாத்திரம் கிறிஸ்தவ சமூகங்களுக்கு போதியதல்ல. இதே நிலமையே ஆசியா, லத்தின் அமெரிக்கா, ஆபிரிக்காவிலுள்ள நாடுகளிலும் நிலவுகிறது பாரிய மாற்றங்கள் ஏற்படும் வேளைகளிலும், தீர்மானங்கள் எடுக்கவேண்டிய போதும் கிறிஸ்தவர்களுக்கும் நற்செய்திதேர்வுக்குரியதொன்றாகிறது. நற்செய்தி பொருள் பொதிந்த வடிவில் முன்வைக்கப்பட்டால்தான் ஒருவர் இத்தேர்வை உரிய முறையில் செய்வர்.


தொடர்ச்சி 2-ம் பக்கம்)


## "மறை உடல் பிறந்த கதை"

**உள்ளே...**

ஒவ்வொரு அமைப்பிற்கும் ஒரு வரலாறுண்டு.
அப்பாரம்பரியங்கள் பெருமைக்குரியவை,
எண்ணி எண்ணிப் போற்றத்தக்கவை.
சிலுவையின் பூவாம் திருச்சபைக்கும் ஒரு சரிதமுண்டு
சிலுவை சுமக்கும் இனமாகிய நாம்
இச்சரிதத்தை அறிவது அவசியமென்பதாலும்
இன்னும்
உயர்தர மாணவரின் 'திருச்சபைச் சரித்திரம்'
என்ற பாடத்தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும்
இந்த இதழிலிருந்து இத்தொடர் கட்டுரை ஆரம்பமாகிறது.

படிக்கத் தவறாதீர்கள்!

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்கருத்து

### ஆயுதப் படைகள்

தற்போது இலங்கையில் குறைந்தது ஐந்து ஆயுதப் படைகள் இருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ஜே. வி. பி., இந்திய அமைதிப்படை, விடுதலைப்புலிகள், ஈ.பி. ஆர். எல். எவ். இலங்கை அரச படை ஆகிய ஐந்தும் தமக்கென படைகளைக் கொண்டுள்ளன.

ஐந்து சக்திகளும் ஆட்சிசெய்யும் இன்றைய நிலையை யுத்தப் பிரபுத்துவம் என்று வர்ணிக்கின்றார்கள்.

ஆயுதப்படைகளை வைத்திருக்கும் அனைவரும் ஒருவரை ஒருவர் கட்டுப்படுத்த முடியாதவர்களாக இருக்கிறார்கள் என்றும், அனைவரும் ஏதோ ஒரு வகையில் அரசியல் பொறிக்குள் அகப்பட்டு உள்ளனர் என்றும் படம் பிடித்துக்காட்டியுள்ளனர்.

ஆனைக்கும் அடி சறுக்கும் என்பார்கள். இந்த சக்திவாய்ந்த ஐந்து தலைகளும் ஆடுகின்ற சதுரங்கம் அடிசறுக்கல் மூலமே திசை திரும்பும் என ஒவ்வொரு குழுவினரும் எதிர்பார்த்து தம் கைவரிசையைத் தொடருகின்றனர்.

வேட்டுப்பலத்தால் அல்ல வாக்குப்பலத்தால் ஆட்சியைக் கைப்பற்றுங்கள் என்று கூறுகின்ற அரசியல் தலைவர்களே, வாக்குப்பலத்திலும் பார்க்க வேட்டுப் பலத்தில் அதிக நம்பிக்கை கொண்டு தமது நடபடிக்கைகளைத் தொடருகின்றனர். வீடுகளிலும், வீதிகளிலும் கொலைகள் மலிந்து, அடக்குமுறைகளின் கைவரிசைகள் கட்டவிழ்ந்து விடப்பட்டுள்ளன.

தந்திரமாக அரசியலைக் கையாண்டு, ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கிய எமது முன்னாள் ஜனாதிபதி தனது சாதனையைக் கண்டு களித்துக்கொண்டிருக்க இறைவனும் நீண்ட ஆயுளை அவருக்குக் கொடுத்துள்ளார்.

ஐந்து படைகளும் அகப்பட்டுள்ள அரசியல்பொறி மீளக்கூடிய பொறி அல்ல. வீரர்கள் மாண்டுகொண்டிருக்க தீரர்கள் புதிய உற்சாகத்துடன் புதிய படைகளைத்திரட்டிக்கொண்டே இருக்கின்ற அளவுக்கு நிலைப்பாடுறுதி உடையதாகவிருக்கின்றது.

ஐந்து படைகளுமே அழிவைக் காணுமல் இயங்கும் சக்திபடைத்தவர்களாக இருக்கின்ற காரணத்தை எண்ணி வியக்காதார் இல்லை. இவை விரைவில் முடிந்துவிடும் என எண்ணியவர்கள் இல்லாதுபோயினும் இவை தொடரும் அறிகுறிகள் அதிகமாகத் தென்படுகின்றன.

இன்றைய நிலையை எண்ணி ஐந்து படைகளில் எதுவுமே பின்வாங்க முன்வராது. இலங்கை அரசுப் படைகள் பின்வாங்காதபடி அவர்களது அடிப்படை உரிமைகளுக்கும் தேவைகளுக்கும் சவால் விடுக்கப்படுகின்றன. 'அவர்களது குடும்பங்களுக்கு இழைக்கப்படும் அநியாயம். ஆயுதப்படைக்கு மறுக்கப்படும் மருத்துவ உதவி என்பன படையினரை மேலும் கோபாவேஷம் கொள்ளச் செய்கின்றன.

ஆயுதப்படையினர் வெறிகொண்டு மேற்கொள்ளும் செயல்களில் பல அப்பாவி இளைஞர்கள் சிக்குண்டு சித்திரவதைகள், கொலைகளுக்கு ஆளாகுவதால் அவர்களது உறவினர் நண்பர்கள் அரசுக்கு எதிராக மேலும் கல்மனம் படைத்தவராகச் செயல்படத் தூண்டப்படுகின்றனர்.

வடக்கு — கிழக்கில் நடந்தவை தெற்கில் தொடர்கின்றன. வடக்கிலும் நிலமைகள் மோசமாகவே இருக்கின்றன.

எந்த ஆனைக்கு அடிசறுக்கும் என்று பார்த்துக் கண் பூத்துவிட்ட இன்றைய நிலையில், அடுத்து என்ன என்ற ஏக்கமே வினையாகக் காத்திருக்க, சமாதானத்துக்கான எதிர்பார்க்கையில் மனம் தளராது இருப்போம்.

பிரச்சினைக்குள் அகப்பட்டுத் தவிப்பவர்கள் கண்கள் திறபடவும், தமது சுயநலத்தாலும், கோபாவேஷத்தாலும் அல்லறும் மக்களின் இடர்கண்டு மனம் மாறவும் வேண்டுமென எதிர்பார்ப்போம்.

## அண்மையில் வடக்கிற்கு விஜயம் செய்த....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி: நற்செய்தி மீளளிப்புப்பணிக்கு உங்கள் சபையின் பங்களிப்பு எவ்வாறு முக்கியத்துவம் பெறுகிறது?

பதில்: திருச்சபையின் சாதாரண அமைப்பினூடாக இப்பணியையும் நடைமுறைப் படுத்தலாமெனினும் தேவையிலிருக்கும் பெரும் பகுதி மக்களுக்கு அது எட்டுவது கடினமானது. ஆனால் தேவைக்கேற்ப செயற்படக் கூடிய எம்போன்ற துறவற சபைக் குழுக்களுக்கு இது மிகவும் பொருத்தமானது. ஆனால் இலகுவான காரியமல்ல போதித்தால் மட்டும் போதாது. ஒவ்வொரு சூழலுக்கும் ஏற்ற தனித்துவமான வழிவகைகளைக் கையாள வேண்டும். இந்நாட்டின் இன்றைய நிலைபோன்ற குழப்பம் நிறைந்த இடங்களில் இது மிகவும் கடினமானது.

கேள்வி: உதாரணங்கள் சில கூறுவீர்களா?

பதில்! பிலிப்பைன்சில் அ.ம. தியாகிகள், அருட்சகோதரிகள், பொது நிலைத்தம்பதிகளைக் கொண்ட கலப்புக்குழுக்களால் இப்படியான மறைப்பணியாற்றப் பட்டது. ஒரு கிராமத்தில் குழுவாழ்வுதான் திருச்சபை என்பதனை கருத்துள்ள முறையில் முன்வைத்தார்கள். அடிப்படைக்கிறிஸ்தவ வாழ்க்கை முறையில் (Bcc) இருந்து ஆரம்பித்து வளர்கிறார்கள். ஐரோப்பாவில் முழு மறைவட்ட ரீதியில் மகா ஞானெடுக்கம் ஒன்று நடைபெற்றது. உ+ம்! கடந்த ஏப்ரலில் 200,000 மக்களைக் கொண்ட ஒரு நகரத்தில் 60 அ. ம. தியாகிகளுடன் இப்பணிக்கென முன் வந்த 500 பொதுநிலையினரும் மூன்று வாரங்களிற்கு இல்லத் தரிசிப்பு உட்பட இதர பணிகளை மேற்கொண்டனர். கனடாவில் சில குழுக்கள் மறைப் பணிகளோடு சேர்த்து மனித முன்னேற்றம் போன்றவற்றிற்காகவும் உழைக்கின்றனர்.

லத்தீன் அமெரிக்காவில் வேறுவகையான உதாரணங்களைத்தரலாம். லீமாவில் ஒவ்வொன்றிலும் 250,000 கத்தோலிக்க மக்களைக் கொண்ட இரு பங்குத்தளங்களில் ஒவ்வொன்றும் 30 பெரிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பணிகள் திட்டமிடப்பட்டன. பயிற்றப்பட்ட பொதுநிலையினர் சமூகப்பணிகளில் மட்டுமன்று மறைபரப்புபணியிலும் ஈடுபட்டார்கள். இதற்காக அவர்கள் தொடர்ச்சியாக ஊக்குவிக்கப்பட்டுப் பயிற்றப்பட்டார்கள். இறைவார்த்தைக்குப் பொறுப்பான எல்லாத்தலைவர்களும் பிரதி புதன்தினங்களில் 3 மணிநேரம் ஒன்று கூடி எதிர்வரும் ஞாயிறு தின வாசகங்களை வாசித்து அவற்றின் அடிப்படையில் செபித்து அது கொடுக்கின்ற அல்லது வெளிப்படுத்துகின்ற ஒளியில் சகல குழுக்களிலும் இறைமக்களுக்கு ஆற்றவேண்டிய மறையுரையைத் தயாரிப்பார்கள். எனவே இன்றைய காலகட்டத்திற்கு மீள் மறைபரப்புப் பணியானதுதேவையானதென்றும், இதற்குரிய அருங்கொடை அ. ம. தியாகிகளிடம் உண்டென்றும் எண்ணுகிறேன். புதிய அணுகுமுறைகளை காலத்திற்கேற்ப, சூழ்நிலைகளுக்கேற்ப கண்டுபிடிககும கற்பனுவளம் அதற்குத் தேவைப்படுகிறது.

கேள்வி: நற்செய்தி மீளளிப்புப் பணியைப் பற்றிப் பார்த்தோம். மறைபரப்பும் பணியில் அ. ம. தியாகிகள் எவ்வாறு முன்னேறுகிறார்கள்?

பதில்: அந்நிய மறைத்தளங்களில் ஈடுபடும் எமது சபையின் அருங்கொடைகளை இன்றும் செயற்படுத்துகின்றோம். நான் உயர் சிரேஷ்டகராக இருந்த கடந்த 3 ஆண்டுகளில், பல வேறுபட்ட காரணங்களுக்காக 4 புதிய நாடுகளில் மறை அறிவிப்புப் பணியை ஆரம்பித்தோம். உ+ம் லத்தீன் அமெரிக்க குவாட்டமாலா:- 15 வருடங்களாக ஒரு குருவுமற்ற மறைவட்டம் ஒன்று அங்கு இருந்தது. கெரில்லாக்கள் சில குருக்களைக் கொலைசெய்தும், எஞ்சினோரைத் துரத்தியும் விட்டார்கள். மறையாசிரியரில் பெரும்பாலானோர் அழித்தொழிக்கப்பட்டார்கள். அம்மறைவட்டத்திற்கு ஒரு ஆயர் நியமிக்கப்பட்ட போது சுதேச குருக்கள் எவரையும் அமர்த்திக் கொள்ள அவரால் முடியவில்லை. இத் தேவையை ஒரு துறவறச் சபையே பூர்த்தி செய்ய முடியுமாயிருந்தது. லத்தீன் அமெரிக்க அ.ம. தியாகிகளே ஒரு கூட்டுமுயற்சியாகத் துணிவுடன் அங்கு சென்றனர். நைஜீரியாவில் வேறு ஒரு சூழ் நிலை. அங்கு கத்தோலிக்க கிறிஸ்தவ சாரார் ஒரு பகுதியிலும் முஸ்லிம் இனத்தவர் மறு பகுதியிலுமாக வாழ்கின்றனர். நாம் ஒரு சில கத்தோலிக்கர் மாத்திரம் வாழ்ந்த கைவிடப்பட்ட ஒரு பகுதிக்குச் சென்றோம். ஆனால் எமது நோக்கம் முஸ்லிம் பகுதியில் மையம் கொண்டிருந்தது. ஒரு துறவற சபையைச் சார்ந்ததால் தேவையான ஆதரவைப் பெற எமக்கு இலகுவாயிருந்தது. அண்மையில் கொரியாவிலும் ஆரம்பிக்கப்பட்ட தளம் முன்பு கூறப்பட்டதைப் போன்று ஒரு வித்தியாசமான நோக்கினைக் கருத்தில் கொண்டதே. எமது இலக்கு சீனு, ஜப்பான் மீதுதான். அங்கு கிறிஸ்தவர்களின் தொகை சொற்பமாகையால் குருத்துவதுறவற அழைத்தல்களை எதிர்பார்க்க முடியாது. எமது குருக்களில் ஒருவர் ஆறுவருட காலமாக ஆண்டுக்கு 6 மாதம் சீனுவுக்குச் சென்று பல்கலைக்கழகமொன்றில் ஆசிரியப்பணியாற்றியமை அங்கு பல தொடர்புகளை உருவாக்கியிருந்தது,

(அடுத்த இதழில்)

## கலைநிலா

### நாட்டார் பாடல்கள்:

இன்று அனைத்து பல்கலைக்கழகங்களும் நாட்டார் இயலுக்கு முக்கியத்துவம் கொடுத்து அநேக பயன் மிகு ஆய்வுகளை நடத்தி வருகின்றன. எழுத்து வாசனை அறியாத பழங்கால மக்கள் தமது வாழ்க்கை அனுபவங்களை ஆசைகளை, கோபங்களை துயரங்களை இன்ப உணர்வுகளையெல்லாம் தமது உணர்ச்சி வெளிப்பாட்டுச் சாதனமான நாட்டார் பாடல் மூலம் கொட்டித் தீர்த்திருக்கிறார்கள்.

இயற்கையோடு இசைந்த அன்றைய வாழ்க்கை நாகரீகம் மிகுந்த இன்றைய இயந்திர வாழ்க்கையில் புதையுண்டு போயின. இன்றைய சமூகவியல் அறிஞர்கள் புதைபட்டுப் போன இப்பண்டைய வாழ்க்கை முறைகளை தங்கமாய்த் தோண்டி எடுக்கின்றார்கள். காரணம் இன்றைய மானிட சரித்திராசிரியர்கள் சிலர் மனச்சாய்வுக்கும் எதிர்கால தேவைகளுக்கும் ஏற்ப சார்பு நிலையில் எழுதுகிறார்கள். ஆனால் பழங்கால மக்கள் இவ் எதிர்பார்ப்புக்கள் எதுவுமற்று தமது உணர்வுகளை அப்படியே வெளிப்படுத்தியுள்ளனர். மானிடவியலாளர்க்கு உண்மையான தரவுகள் நாட்டார் பாடல்களே.

நாட்டார் பாடல்கள் பல்வேறு வகைப்படுவன. இறை பாடல்கள், தொழிற்பாடல்கள், தாலாட்டுப்பாடல்கள், வசை பாடல்கள், ஒப்பாரிப்பாடல்கள் என வாழ்வின் பல்வேறு கூறுகளை தம்முள் கொண்டனவாகும். அது மாத்திரமல்லாது அவைகள் அற்புதமான கவிதை நயத்தையும், கொண்டுள்ளன. அதனுல்தான் பாரதியின் குயில் இவ்வாறு பாடியுள்ளது.

ஏற்ற நீர்ப்பாட்டின் இசையிலும், நெல்லிடிக்குங்  
கொற்றொடியார் குக்கு வெனக் கொஞ்சும் ஒலியினிலும்,  
சுண்ணமிடிப்பார் தஞ்சுவை மிகுந்த பண்களிலும்  
பண்ணைமடவார் பழகு பல பாட்டினிலும்  
வட்டமிட்டுப் பெண்கள் வளைகரங்கள் தாமொலிக்கக்  
கொட்டி இசைத்திடுமோர் கூட்ட முதப் பாட்டினிலும்  
நெஞ்சைப் பறி கொடுத்தேன்.

நாட்டார் பாடல்கள் சுவையும், நயமுடனும், சமூக பழங்குடி மக்களின் சமூக கருத்துக்களின் வெளிப்பாட்டுச் சாதனமாகவும் உள்ளன.

எல்லா மக்களும் தமது தேவைகளுக்காக இறைவன் உதவியை நாடுதல் இயல்பு. இங்கு மீனவர் நாட்டுப்பாடலாகிய அம்பாவில் ஒரு பாடல்

மாதாவே அல்லில்லா என் தாயாரே  
மனதிரக்கம் அல்லில்லா உள்ளவளே  
மோச்சத்து அல்லில்லா இராக்கினியே  
மூடிவந்த அல்லில்லா மாந்துகிலே  
மாமரியே அல்லில்லா தாய் மரியே  
மைந்தரெமை அல்லில்லா ஆதரியும். —அடுத்த இதழில்

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சூரிய கரங்கள் வாளேந்த சந்திரன் தோற்றோடும் விடிகாலை
இருளரக்கன் மேகப்படைதிரட்டி
போருக்குக் கட்டியங் கூறத் தொடங்கினன்.
பிரளயமொன்று பிரசவமாவதற்கும்
முத்தாய்ப்பு தெரிந்தது.
யுகசந்திகளில் இப்படித்தான் நிகழுமாம்.
புலியும் மானும் ஒன்றாய்ப் படுத்துறங்கும்
சிங்கமும் கன்றும் ஒரு கூட்டில் விளையாடும்.
அந்த சமாதான சாம்ராஜ்யத்திற்கு
அடிக்கல்லு நடப்பட்ட
அந்த நாளிலும் இதுதான் நிகழ்ந்தது.
திருச்சபை உருவான நாளைத்தான் சொல்கிறேன்.
இயேசு மரித்த சோகம் ...
நம்பிக்கையின் கடைசித்துளியும் வடிந்தநேரம் ...
தாயும், காட்டிக் கொடுத்தவன் போக பதினொருவரும்
தெரிந்தெடுக்கப்பட்ட மத்தியாசும்
மற்றும் பெண்களும்
ஒரு மனதாய்
செபத்தில் கூடியிருந்தனர்.
விண்ணகம் செல்வேன்
ஆனால் அல்லங்கங்களில் உங்களை வீணே விடேன்
துணையொன்று அனுப்புவேன்
இயேசுவின் இந்த வார்த்தையே குறியாய்
தொடர்ந்தும் செபத்தில் அவர்கள் இருந்தனர்.
பூட்டிய அறைக்கு வெளியே
ஊரில், ....
பெருங்கூட்டம்.
“பெந்தகோஸ்தே’ விழாவிற்கு பெரும் மக்கள் கூடியிருந்தனர்
வியாபாரம்,
நாடுகடத்தல் ......
மற்றும் பல வசதி கருதி உலகெங்கும் சிதறிய யூதர் அனைவரும்
ஒன்றாகக்கூடும் பெருவிழாவில் ஒன்றது.
பார்த்தர், மேதர், எலாமித்தர்,
ஆசிய, எகிப்திய நாட்டினர்
இன்னும் பற்பல பட்டினத்து யூதர்கள் பலரும் வந்திருந்தனர்
எங்கும் கூச்சல் கும்மாளம
திருவிழா நாளின் பெருங்கோலம்.
பூட்டிய அறையின் உள்ளே
ஒரு சோகம்
பாலுறை நீராய் ஒரு பயம்.
சங்கீதங்களும் வேண்டுதல் முணுமுணுப்புக்களும்
புலம்பல் ஓசைகளுமே ஒலித்தவாறிருந்தன.
திடுமென நிகழ்ந்தது மேகப்பிரசவம
பெருமழை......

## சந்திரன்

இடி ......
மின்னல் ......
யுகப் பிரசவ நிகழ்வுகள் மத்தியில்
சீடர்கள் இருந்த அறை ஒளியில் திளைத்தது.
ஆவியின் ஆற்றல் நெருப்பின் வடிவில்
ஒவ்வொருவர் மேலும்
வ சேர்ந்தது.
தீமையை எரிக்க
நன்மையைப் புடமிட ...
சீடர்களுக்கு சக்தி கிடைத்தது.
யூதரின் மதவெறிக்குப் பயந்து
உரோமையரின் கொடுவாளுக்கு நடுங்கி
அடைந்து கிடந்த அப்போஸ்தலருக்கு
அரும் பெரும் சக்தியும் துணிவும் வந்தது.
அறையைத் திறந்தனர்
வெளியே வந்தனர்.
இன்றும்
பல மேடை கண்ட பேச்சாளருக்கும்
பேசத் தொடங்கையில் கால்கள் நடுங்கும் கரங்கள் பதறும்
முதற்சில வரிகள் தொண்டையில் சிக்கும்.
மீனவர் இராயப்பர் ......
கடலிலே வீரர் ஆனால் கதைக்கத் தெரியாதவர்
முரடர் ஆனால் முதுகெலும்பற்றவர்
பெண்ணிடத்தில் இயேசுவை மறுதலித்த பேதை
இப்போது :.. ..
ஆவியைப் பெற்றபின்போ
மேட்டிமேலேறி கூட்டத்திற்குப் போதிக்கிறார்.
இயேசுவைச் சொன்னார்.
அவர் வாழ்வை மரணத்தை எடுத்துக் கூறினார்
கொலைப்பழியை யூதரிற் சுமத்தினார்
மனமாற்றத்திற்கான அழைப்பினை விட்டார்.
அதோ! மூவாயிரம்பேர் ......
இயேசுவின் மறையுடலில்
ஒரு நாளில் .. ...
ஒரு மணித்துளியில்
மூவாயிரம் இளந்துளிர்கள்
ஆக,
இயேசு உயிர்த்த ஐம்பதாம் நாள்.
இயேசு விண் சென்ற பத்தாம் நாள்,
தூயஆவி ஆற்றலுடன் இறங்கிய அந்த
பெந்தகோஸ்தே நாளுமே
கிறீஸ்துவின் மறையுடல் ‘உரு’வான நாளும்
திருச்சபையின் பிறந்த நாளுமாம்.

இன்றைய உலகின் அவல நிலை—1.

# புதியதோர் யுகத்தின் பேறுகால வேதனை

—அருட்திரு. அதிரியான் யோசப் அ.ம.தி.

“பிள்ளைகள் இன்று இடாம்பீக சுகபோக வாழ்க்கையையே நாடுகின்றனர். அவர்கள் நற்பழக்கவழக்கமற்றவர்கள். அதிகாரத்தை அலட்சியம் செய்கின்றனர் முதியோர்க்கு மரியாதை காட்டுவதேயில்லை வழிபாட்டுத் தளங்களிலும், அலம்பிக்கொண்டிருக்கின்றனர். பெரியோர் அறைக்குள் வந்தால் எழும்பி மரியாதை காட்டமாட்டார்கள். பெற்றோரை எதிர்த்துப் பேசுகின்றனர். தங்கள் ஆசிரியர்களுக்கும் கொடுமை இழைக்கின்றனர்.” இம்முனகுதல் எம்மத்தியில் வாழும் ஓர் மூதாட்டியின் பெருமூச்சல்ல மாறாக கி.மு. 4-ம் நூற்றாண்டில் வாழ்ந்த சொக்ரட்டீஸ்என்னும் கிரேக்க ஞானியின் முறையீடாகும். சுமார் 4000 வருடங்கள் இவருக்குமுன் இருந்த ஒரு எகிப்திய மதகுரு.” எங்கள் உலகம் சீரழிந்து போயிற்றே. பிள்ளைகள் பெற்றோருக்கு அமைவதேயில்லை.’ ’என்றுகல்லில்செதுக்கி வைத்துள்ளார்.

வரலாற்றில் முன்நிகழ்ந்தவை மீண்டும் வேறொரு காலகட்டத்தில் நிகழலாமெனவும், ஏறத்தாழ ஒரே காலகட்டத்திற்குள் உலகெங்கும் ஒரே மாதிரியான (Pattern) பாரிய மாற்றங்களும் இயக்கங்களும் நிகழுமெனவும் வரலாற்றறிஞர்கள் கூறுகின்றனர். எனவே இவ்வுலகம் ஓர் உயிர்ப்பொருளைப்(Organism) போல்இயங்குகின்றதெனவும்கருதுகின்றனர். ஒரு நாகரீகம் வளர்ச்சியடைவதால் வரும் சுகபோகங்களின் நன்மைகளைவிடத் தின்மைகளையே மக்கள் நாடுவதால் அந்நாகரீகம் விரைவில் சீர்குலைந்து போவதையும், அவ்விடத்தை வேறொரு நாகரிகமோ இனமோ பிடித்துக்கொள்வதையும் சரித்திரம் எடுத்துக்காட்டுகின்றது.

இன்றைய உலகில் (நம்நாட்டிலுங்கூட) புரட்சிகரமான மாற்றங்களையும் கோரச் சீரழிவுகளையும் கண்கூடாகக்கண்டும் அனுபவித்தும் வருகின்றோம். விஞ்ஞான, தொழில்நுட்பமுன்னேற்றங்களினால் சமுதாய வாழ்க்கையும், பண்பாட்டு மரபுகளும், கோட்பாடுகளும், அரசியலும், பொருளாதாரமும், சமய மதிப்பீடுகளுங்கூட பாரிய தாக்கங்களுக்கும் துரித மாற்றங்களுக்கும் உள்ளாயின.

ஜனநாயகம், சமத்துவம், சுதந்திரம், சுயநிர்ணய உரிமை (Right of Self-Determination) கலந்துரையாடல், கூட்டுறவு, அதிகாரம் பகிர்ந்து தவுதல் (Subsidiarity) அல்லது பண்படுத்துதல் (Decentralization) குழு ஆணை உரிமை Collegiate Power) போன்றவற்றைத் தாரகமந்திரமாக ஓதும் இன்றைய உலகில் பட்டம், பெயர், பதவி, செல்வாக்கு, சர்வாதிகாரம் போன்றவை விலைப்படாதன்றோ.

இதனால், இதுகாறும் வழிகாட்டிய ஆதாரதத்துவங்களும், கலங்கரை விளக்காயிருந்த விழுமியங்களும் சீர்குலைந்து அற்றுப்போக (Velue-Vacuum, விழுமிய வெற்றுநிலை). ஐயப்பாட்டு நிலைக்குத் தள்ளப்பட்ட மனிதன்திக்குத்திசைதெரியாது தட்டுத்தடுமாறுகின்றான். நிரந்தரமான ஒருங்கிணைந்த மதிப்பீடுகள் (Permanent and Integrated Values) இல்லாமல் ஒருமுகப்பட்ட ஒரு குறிக்கோளைத் தெளிவாய் அறிந்து தெரிந்துகொள்ள இயலாதவனாய், நாளைக்கு என்னவோ என்ற அச்சத்துடன் அன்றாடச் சிக்கல்களை சமாளித்துவருகின்றான். எனவேதான் இன்று பெரும்பாலானோர் நிச்சயமற்ற எதிர்கால ஈடுபாட்டைத் தவிர்த்து தற்காலிக ஈடுபாட்டில் (Temporary Commitment) இறங்குகின்றனர். இந்த மனநிலை திருமண, துறவற, குருத்துவ அந்தஸ்துக்களிலுங்கூடக் காணக்கிடைக்கின்றது. மேலும் நாகரீகச் சுகபோகங்கள் பெருகப்பெருக உறுதியான மனமுதிர்ச்சியடைய மனிதனுக்குக் காலந்தாழ்த்துமென்பதும் மேற்கூறிய மனநிலைக்கு இன்னுமொரு காரணமாயிருக்கலாம்.

(மிகுதி அடுத்த இதழில்)

## முக்கிய அறிவித்தல்

பங்குத்தளங்களில் நடைபெறும் பங்குநிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள் அனுப்பப்படுமிடத்து, பங்குத்தந்தையின் கையொப்பம் இருந்தால் மட்டுமே, கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பிரசுரிக்கப்படும்.(ஆ—ர்)

# சிலுவையின் மகிமை

(சென்ற இதழ் தொடர்)

சிலுவையில் தான் புண்ணியத்தின் சாங்கோபாங்கம். பரிசுத்தத்தின்நிறைவு ஞானச் சந்தோஷம். சிலுவையின்றி மனச் சமாதானத்தையும் பேரின்ப வாழ்வின் நம்பிக்கையும் வேறெதிலும் எதிர்பார்க்க முடியாது. அதனாலன்றோ கிறிஸ்துவும் ‘‘உன சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின்செல்’’ என்றார்.

ஆம், இறை அன்பு இறை நம்பிக்கை, இறை சித்தத்திற்குப் பணிதல் போன்றவை கடினமானவை. இறைமகன் கிறஸ்து மனுமகனாகி, மக்கள் எமக்காய் மரணத்தைத் தழுவிய மகிமை நிறை சிலுவையைக் கண்டதும் மனமுடைந்து நிலைதடுமாறுவதும் ஏனோ? மனுக்குலத்தின் பாவத்தைத் தன் சிலுவையிலே சுமந்த யேசுவின் சிலுவையிலே சுமந்து யேசுவின் சிலுவையிலும் பார்க்க பழுவான சிலுவையைச் சுமப்பவன் யார்? எமக்கு வழிகாட்டியாய் தன் சிலுவையைச் சுமந்து சென்று மரணத்தைத் தழுவி உலகை ஜெயித்த உத்தமன் யேசு. நாமும் தன்னோடு பின்சென்று அவர் அன்புக்காக நாமும் மரிக்க வேண்டுமென்று சித்தமாகிறார். எம் நாளாந்த வாழ்க்கையின் பிரதிகூலங்கள் இன்னல் இடைஞ்சல்கள், வாதை வருத்தங்கள் தாழ்வு, பிளவுகள், தனிமை வறுமை இவைதான் நம் சிலுவைகள். மட்டற்ற பொறுமை மறுக்கமுடியாத சோதர அன்பு அநீதிகட்கு மன்னிப்பு, எதிரியில் காட்டும் பாசம், எளிமை தாழ்மை, தற்பரித்தியாகம், போன்ற சுகந்த மலர்களால் இணைக்கப்பட்ட மலர்மாலை ஒரே வசனத்தில் சொல்லிவிடுவோமானால் எம் அருள் வாழ்வின் ஒரே நூல், அனைத்தையும் அறிவிக்கும் அறநூல் அறவழி காட்டும் அரிய நூல் சிலுவையன்றி வேறொன்றில்லை.

கர்த்தர் யேசுவின் மரணத்தின் பின் கல்வாரி மலையிலே புதைத்து கலனிப்பாரற்றுக் கிடைத்த சிலுவையைத்தேடிச் சென்ற வீராங்கனை புனித ஹெலன் அரசி வீரத்துடன் கண்டெடுத்து, விண்ணுக்கும், மண்ணுக்கும் இணைப்பாலத்தை வெற்றியுடன் திருச்சபைக்கு அளித்த பெரிய திருநாள் செப்டெம்பர் மாதம் 14-ம் திகதி திருத்தாயாம் திருச்சபையால் கொண்டாடப்படுகிறது. சிலுவை வழியாய் மனுக்குலம் மீட்கப்படவேண்டுமென பிதாச் சித்தங்கொண்டார். நம் சிலுவையைச் சுமந்து தன்னைப் பின்செல்லவேண்டுமென்று கிறிஸ்துவிரும்புகிறார். சிலுவையின் மறைபொருளை இவ்வுலகில் அறிந்து அதன் மூலம் கிடைக்கவிருக்கும் மீட்பைச் சம்பாவனையாகப் பெறவிரும்பினால் நம் சிலுவையைச் சுமந்து செல்வோமாக.

நாம் நல்மனமாய்ச் சிலுவையைச் சுமந்து சென்றால் சிலுவை எம்மைச் சுமந்து சென்று பாடுகளின் முடிவாகிய பேரின்பத்தில் கொண்டு சேர்க்கும் என்பதில் ஐயமில்லை. நாம் ஓர் சிலுவையைக் கண்டு பயந்து ஓடுவோமானால், அதை விடப்பழுமிக்கதும், பயங்கரமானதுமானவேறோர் சிலுவை, எப்போதோ, எவ்விதத்திலோ, எங்கேயோ எமமை எதிர்நோக்கி இருக்கும் என்பதையும் மறவாதிருப்போமாக.

வாழ்க திருச்சிலுவையே! ஏனெனில் நீ தான் வாழ்வளித்து எம்மை வானுலகில் சேர்ப்பாய்.

அருட்செல்வி. பெனடிக்ரா வஸ்தியாய்பிள்ளை (தி. சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதைந்த ஓவியம்




மிதியடிச் சத்தம் கேட்டதும் கட்டிலில் படுத்திருந்த ஜெகன் எழுந்து ''குட்ஈவினிங்'' மிஸ்டல்சி. என்று வழமையான புன்னகை முத்துக்களை உதிர்க்கின்றான். பதிலுக்கு மரியாதையில்லை. ஓ..... அந்தப் புன்னகை அதே புன்னகை தான் ஒருமாதமாக அவளைக் காந்தம் போல் இழுத்துக் கொண்டிருந்தது. ''மிஸ்ரர் ஜெகன் இந்த நிலையிலிருந்து கொண்டு ஒவ்வொருவரையும் சரியாகக் கண்டு கொள்கிறீர். இது உங்களால் எப்படி முடியுது?'' ''ஓ...... அதுவா ஒரு'' பயிற்சிக்காகச்செய்து கொண்டிருக்கின்றேன். ஒருவேளை எனக்குப் பார்வை திரும்பாவிட்டால் இப்பயிற்சி எனக்கு உதவுமல்லவா? எல்லோரையும் ஏதோ ஒரு விதத்தில் கண்டு கொள்கின்றேன். உங்களுடைய ஸூவின் ஒலி ஒருவித நாதம் எழுப்புகிறது. அதாவது நீங்கள் நடக்கும் போது கால்களிடையேயுள்ள தூரம் ஒரே அளவினை உடையதாயிருக்கிறது. அப்படி நடப்பவர்கள் அழகான நடையையும் அழகான தோற்றத்தையுமல்லவா கொண்டிருப்பார்கள். அப்படித்தானே மிஸ்டல்சி? என்று ஒரு பிரசங்கமே செய்து விட்டுமீண்டும் புன்னகைக்கின்றான். நேர்ஸ் டல்சி அவனைக் கவனித்து விட்டு அடுத்த வார்ட்டுக்களையும் பார்வையிட்ட பின் பணிமனையில் ஒரு கதிரையில் அமர்ந்து கொள்கிறாள்.

டல்சியின்மனம் பலகோணங்களிலும் சிதறியது. மனதை முழுவதுமாக ஆட்டிப்படைக்கின்ற மனக்கிலேசங்கள். ஒரு தீக்கொழுந்தாக உடலை எரிப்பதுபோன்ற உணர்வுகள், அவள் பார்வை அவன்மேல் தாவிப் பாய்கிறது. தலையணைகளை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி அதன் மேல் சாய்ந்து முகத்தில் உதிரும் புன்னகை முத்துக்கள் அவளை வாட்டியது. பாவம் ஜெகன். மோட்டார்சைக்கிள் அவரை இந்தநிலைக்குள்ளாக்கிவிட்டது. எவ்வளவு அழகான முகம். அதிலேதான் எத்தனை புன்னகைத் துளிகள். அவள் சுயநிலைவுக்கு வந்து விட்டாள். ''சே! இதென்ன? எனக்கு இப்ப என்ன நடந்தது? ஏன் இப்படி என் மனம் சஞ்சலப்படுகுது என்று தனக்குள்ளேயே கேள்விக் கணைகளைத் தொடுத்துக் கொண்டு டல்சி கதிரையை விட்டு எழுந்து செல்ல அந்த வைத்திய சாலையின் முகப்பிலிருந்த சுவர்க்கடிகாரம் 12 முறை அடித்து ஓய்ந்தது.

மறுநாள் காலையில் டல்சி தனதுவீட்டிலுள்ள ட்ரெஸிங்ரேபிளுக்கு முன் சென்று தலைவாரிக் கொண்டிருந்தாள். அந்தக் கண்ணாடியில் அவளின் தோற்றம் தெளிவாகத் தெரிந்தது. கறுத்து சதைப்பிடிப்பில்லாமல் ஒட்டிப்போன கன்னங்களில் அளவு கணக்கில்லாமல் பருக்கள். உதடுகளின் கட்டுப்பாட்டை மீறிய மூன் வரிசைப் பற்கள். எந்த ஆண்மகனையும் ஒதுங்கச் செய்யும்தோற்றமது. கண்ணாடியை விட்டகன்ற டல்சி ஆண்டவரே! என்னைப் போன்றவர்களை இன்னுமேன் உயிரோடு வைத்திருக்கின்றீர். இவ்வளவு காலமும் பரிகாசம் செய்தது போதாதா? என்று விழியோரங்களில் தரித்து நின்ற கண்ணீர்த்துளிகளை துடைத்துக் கொள்கிறாள். ஆனாலும் அவளின் மனக் கண்ணாடியில் ஜெகனின் உருவம் தெரிந்தது. அவனின் அழகுத் தோற்றம். இனிமையான வார்த்தைகள். எந்நேரமும் முகத்தில் உதிரும் புன்னகைத் துளிகள் எல்லாம் காட்சியளிக்க அப்படியே கட்டிலில் சாய்கிறாள். ஆனால் மனம் மட்டும் ஓலமிட்டுக்கொண்டேயிருக்கிறது.

மாலை 5:30 மணி அவள் இரவு நேரக் கடமைக்காக அந்த வைத்திய சாலைக்குள் நுழைகின்றாள். ஷூவின் சத்தத்தை உணர்ந்த ஜெகன் ''குட் ஈ வினிங்'' மிஸ் டல்சி. பதில் இல்லை. மௌனம். மின்னலென வாடிவிட்டது அவனின் முகம். டல்சி அவனைக் கவனித்து விட்டு அந்த மேசையில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். அவன் மீண்டுமொரு மிஸ்போட்டு டல்சியிடம் ஒரு வெள்ளைத் தாளும் பென்சிலும் பெற்றுக் கொண்டு கட்டிலில் அமர்ந்து

✻✻✻✻✻✻✻✻✻✻✻

சந்தியோகு பிரபா
முதலை குத்தி உயிலங்குளம்.

✻✻✻✻✻✻✻✻✻✻✻

கொண்டு ஏதோ எழுதிக் கொள்வது போல் பாவனை செய்தான். தான் ஒரு அநாதை என்றானே! யாருக்கு கடிதம் எழுதுகின்றான்? ஒரு வேளை தனது காதலிக்குத்தான் எழுதுகின்றானோ? கண்பார்வையிழந்து யாருடைய உதவியுமில்லாமல் எழுதுகிறபடியால் நிச்சயம் அப்படித்தான் இருக்கும். அப்படியென்டால் என்னிடம் குழைவதெல்லாம்? என்று வினா எழுப்பிக்கொண்டு கடமை முடிந்து வீட்டிற்குச் செல்கிறாள்.

மறுநாள் கடமைக்கு வந்த டல்சியிடம் ''இந்தாங்க மிஸ் டல்சி. என் கற்பனையில் காண்கின்ற உங்கள் உருவத்தை பார்வையற்ற நான் வரைந்துள்ளேன் ம்...... பாருங்க'' என்று அவளிடம் கொடுத்து விட்டு ''எனக்குத் திரும்பவும் பார்வை கிடைச்சிடுமா?'' ''நிட்சயம் கிடைச்சுவிடுமென்டு தான் நம்புகின்றோம். டொக்ரர்கள் என்ன செய்வாங்க? அவங்க வெறும் கருவி மட்டும் தான். அதை இயக்க எல்லாம் வல்ல ஒருவர் இருக்கிறார். அவரையே நீங்கள் நம்புங்கள் ஜெகன்!'' என்று அவள் சொல்லி முடிப்பதற்குள் ''நீங்கள் கோயிலுக்கெல்லாம் போறதா மிஸ்டல்சி. நீங்க போகிறதென்டால் எனக்கு''...... ''எனக்கு என்ன சொல்லுங்கோ? ஜெகன்'' என்றாள். ''இந்தப் பார்வையற்ற அனாதையின் நலனுக்காக ஆண்டவரிடம் வேண்டிக் கொள்வீங்களா டல்சி?'' அவளின் மனம் பேசுகிறது. ம்...... என்ன உரிமை. எத்தனை துணிச்சல்? ''என்ன மிஸ் டல்சி நான் கேட்கிறன் நீங்க ஒண்டும் பேசாம நிக்கிறீங்க. விருப்பமில்லாட்டாச் செய்யாதேயுங்க'' என்றான். ''இல்லை மிஸ்ரர் ஜெகன் கட்டாயம் நான் செய்வேன்.'' என்றதும் ''அப்படியெண்டா இந்த ஓவியத்தையும் பத்திரமா வச்சிருந்து எனக்குப் பார்வை கிடைச்சதும் திருப்பித் தருவீங்களா?'' ''O, yes''போட்டு விட்டு ஓவியத்தை எடுத்துக் கொண்டு செல்கிறாள்.

வீட்டிற்கு கொண்டு சென்ற அந்தக் கோணல் மாணலான ஓவியத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்துவிட்டு மேசையில் இருந்த ''பைபிளை'' எடுத்து கண்ணுக்குத் தென்பட்டதை வாசிக்கின்றாள்.

''நான் உங்களுக்குச் சொல்கின்றேன். ஒரு பெண்ணை இச்சையோடு பார்க்கும் எவனும் அவளோடு விபச்சாரம் செய்தாயிற்று''

பைபிளை அப்படியே மூடி வைத்து விட்டு இரு கரம் கூப்பி பரலோகத்தில் இருக்கின்ற எங்கள் பிதாவே இந்த அபலையை மன்னியும். சபலங்களுக்கும் சலனங்களுக்கும் பலியாகிவிட்ட இந்தப் பாவியை மன்னித்துக் கொள்ளும். பார்வை இழந்து நிற்கும் அந்த அழகான இளமைத் துடிப்புள்ள மனிதனுக்கு மீண்டும் அந்த பார்வையைக் கொடுத்தருளும். என்னையறியாமல் அவரிடம் பறிகொடுத்த ''என் மனதை'' மீட்டுத்தாரும். பார்வையிழந்த அவர் அவலட்சணமான என்மீது கொண்ட அன்பை மாற்றியருளும் யேசுவே! ஆமென்.

மறுநாள் டல்சியை வரவேற்க ஜெகன் காத்திருந்தான். மிதியடிச்சத்தம் தொடருகிறது. ஆனால் மாறுபாடாக இருந்தது. ''Nurse இண்டைக்கு மிஸ் டல்சி வர மாட்டாவா?'' ''எனிமேல் வர மாட்டா. O, my God ம் அப்படியா? yes மிஸ்ரர் ஜெகன் அவ தானாக ட்ரான்ஸ்ஸர் எடுத்துக்கொண்டு போய் விட்டா'' என்று சொல்லிக் கொண்டு அந்தக் குரல் மறைந்தது.

[illegible]

டுக்கள் அவிழ்க்கப்பட்டது. அவனுக்குப் படிப்படியாகப் பார்வை வழமைக்குத் திரும்பியது. Doctor அவனின் உடல் நிலையைப்பார்த்துவிட்டு அன்றைய தபாலில் வந்ததாகக் கூறி அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டு செல்கின்றார்.

அவன் அவசரமாகப் பிரிக்கின்றான். உள்ளே கோணலும் மாணலுமான ஒரு (Nurse) தாதியின் உருவ ஓவியம். ஓ...... அவனுக்கு எல்லாம் புரிகிறது.

''சிதைந்த ஓவியம்''

O, my God என்ன இது? நான் கொடுத்த ஓவியத்திற்கு தலைப்புக் கொடுத்திருக்கின்றாளே! இது என்ன சிதைந்த ஓவியமா? நோ! நோ! இது சிதையாத ஓவியம். என் இதயத்திலுள்ள ஓவியம் சிதைவதா? ம்... ம்... என்ன கீழேயும் ஏதோ தடித்த எழுத்தில் அடிக்குறிப்புக் கூட எழுதியிருக்கிறாளே!

''அழகை அவலட்சணம் ஆராதிக்கலாம். ஆனால் அடைய முடியுமா?'' அவன் மனம் மௌனமாக ஓலமிடுகின்றது.

(யாவும் கற்பனை).




புனிதகோஸ்மாசும்தமியானும்-
செப்டம்பர் 26

அரேபிய நாட்டவரான இவ்விருவரும் உடன் பிறந்த சகோதரர்கள். இவர்கள் மருத்துவக் கலையில் தேர்ந்து பல நாடுகளுக்கும் சென்று மருத்துவம் புரிந்து வந்தனர். இவர்கள் ஏழைகளுக்கு இலவசமாகச்சிகிச்சை செய்தனர். இவர்களின் புனித வாழ்வின் பயனாக மிகக்கொடிய வியாதிகளையும் குணப்படுத்தினர். இதனால் புகழ்பரவ, பல நோயாளிகள் பலபல இடங்களில் இருந்தும் வந்தனர். மேலும் இவர்கள் உடல்நோயைக் குணப்படுத்தியதோடு, ஆன்ம நோயைப் பற்றியும் எடுத்துரைத்தனால். எண்ணற்றோர் மனந்திரும்பினர்- பின்னர் வேதத்தை மறுதலிக்கும்படிக் கொடூரமாய் அடிக்கப்பட்டனர், கடலில் அமிழ்த்தப்பட்டனர் ஆனால் மூழ்கவில்லை, நெருப்பில் இடப்பட்டனர் ஆனால் சாகவில்லை இவர்களை நோக்கி அம்புகள் எய்தனர் ஆனால் இவர்கள் மேல் தைக்கவில்லை. இறுதியாக தலைவெட்டப்பட்டு மரித்தனர்.

புனித வின்சென்ட்- தே- பவுல்-
செப்டம்பர் 27
[இ. பி. 1581-1660]

ஏழைக் குடும்பத்திலே தோன்றிய இவர் தனது ஆடு மாடுகளைக் காட்டில் மேய்க்கும் போது தன்னந் தனிமையாக இருந்து ஜெபம் செய்வார் பிறகு இவர் பள்ளிக் கூடம் சென்று கல்வி கற்றுக் குருப்பட்டம் பெற்றார். இவரது தாழ்ச்சி, பொறுமை கீழ்படிதல் ஆகிய புண்ணியங்களினால் எல்லோரும் இவர் மட்டில் அன்பாகவிருந்தனர். ''நான் கடவுளுக்கும். ஏழைகளுக்கும் சொந்தம்'' என்று கூறுபவர், தனது 79.வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

எவர் சில்வர் தயாரிப்புகள்

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவற்றிலும் பார்க்க தரமாகவும். மலிவாகவும் தயாரிக்கப்பட்ட Rajz Brand தேவநற்கருணைப் பாத்திர (Ciborium), இரசப் பாத்திரம் (Chalcie), தேவநற்கருணைத் தட்டு காணிக்கைப் பை, பீட அலங்கார விளக்குகள். பூ ஏந்தனங்கள் தூண்டாமணி விளக்குகள், தேவநற்கருணைக் கூடு (Tapernacle) இன்னும் பற்பல.காட்சிஅறை:- S. A. தேவதாசன். சூராவத்தை, கனகம்.

## குருத்துவ அழைத்தல்

யாழ். மறைவட்ட சிறிய குருமடத்தில்சேர்ந்து யாழ். மறைவட்டத்தில் குருக்களாகப் பணிபுரிய விரும்புவோர் தங்கள் பங்குத்தந்தையர் மூலம் விண்ணப்பிக்கவேண்டும். பங்குத்தந்தையர்கள் ஒரு ஆண்டுக்கு மேல் அவர்களைக் கவனித்து தகுதியானவர்களுக்கு அனுமதிக்கான விண்ணப்பங்களைக் கோருவதே சிறந்தது.

1989 ஆகஸ்டு மாதம் க. பொ. த. (உ. த.) பரீட்சைக்கு தோற்றவிருந்த மாணவர்களும் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களும் இம்மாதம் 18 ஆம் திகதிக்கு முன்பு பங்குத் தந்தையர் மூலம் விண்ணப்பிக்கலாம் க. பொ. த. (உ. த.) பரீட்சைகளை உங்கள் பாடசாலைகளிலேயே எழுதவேண்டும். குருமடத்து வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகும். தகுதியானவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

1990 ஆம் ஆண்டு தை மாதம் குருமடத்தில் சேரவிரும்பும் மாணவர்கள் நவம்பர் 27 — டிசம்பர் 4-க்கு இடைப்பட்ட காலத்தில் தமது விண்ணப்பங்களை அனுப்பவேண்டும். 1990 இல் ஆண்டு 10, ஆண்டு 12 கல்வியை ஆரம்பிக்கவிருக்கும் மாணவர்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

அதிபர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை
15-9-1989




அன்பு இளம் உள்ளங்களுக்கு!

ஏதாவதொரு போத்தலில் எண்ணெயை அல்லது மருந்தை விடுவதற்கு முன்னர் நாம் போத்தலை வெறுமையாக்குகின்றோம். அதனுள்ள தேவையில்லாதனவற்றை முழுமையாகக் கழுவி, வெளியேற்றிய பின்னரே நமக்கு வேண்டிய திரவத்தை அப்போத்தலினுள் ஊற்றுகின்றோம்.

கிறிஸ்து இறைவனாக இருந்தவர், மனிதனாகப் பிறந்ததின் மூலம் தன்னை முழுமையாக வெறுமையாக்கினார். இந்த வெறுமையாக்கலே அவரை மாபெரும் பாவிநிலையில் சிலுவையைச் சுமக்கச் செய்தது; தனக்கென வாழாமல் பிறருக்கென வாழவைத்தது;

"பிதாவே, இவர்கள் அறியாமல் செய்கிறார்கள்; இவர்களை மன்னித்தருளும்" என்று தன்னை வதைத்தவர்களையும் மன்னித்து மறுவாழ்வினை வழங்கச்செய்தது. விளைவாக, அவர் இறைவனோடு ஒன்றானார்.

பிதாவே உமகையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்" என்று இறைவனை மகிமைப்படுத்தினார்.

எனவே, அன்பர்களே, நாமும் இறைவனால் நிரப்பப்பட வேண்டும்; இறைவனால் ஆட்கொள்ளப்படவேண்டும். இதன் ஆரம்பக்கட்டமாக எம்மையே நாம் வெறுமையாக்கவேண்டும். எமது தன்னல உணர்வு, ஆணவம், அகந்தை, கோபம் போன்ற துர்க்குணங்களை அகற்றிவிட்டு நல்ல கிறிஸ்தவ மதிப்பீடுகளை எமது வாழ்வில் கொண்டு மகிழ்வோம்.

நல்வாழ்த்துக்களுடன்,
அன்பு நெஞ்சன் வி. பி.

□ □ □

அன்பு நெஞ்சன் வி. பி.

பாதுகாவலன் வாரஏட்டில், இளைஞர் உலகம் பகுதியில் தங்களுடன் இணைந்து இன்றைய இளைஞர்களுக்காக மேலும் பல புதிய படைப்புகளைப் படைத்துவரும் புதிய எழுத்தாளர்கள் அனைவருக்கும் நான் நன்றி கூறுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய காலத்திற்கேற்ற முறையில் படைப்புக்கள் அமைந்து வருவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாக வாழ நினைத்தால் வாழலாம், ஒளி ஏற்று உன் கரத்தால், இளைஞனே உன் காலமெல்லாம் என்ன செய்தாய், பாவிகளையே அழைக்க வந்தேன், உன் பாதை நோக்கி, நல்லசிந்தனைகள் இளைஞர்களில் குற்ற உணர்வும், கவலையும் போன்ற படைப்புக்களைப் படைத்த M. வுளோரன்ஸ் சூசைதாஸ், யோசவ் டெனிஸ்லஸ், அருளப்பு இரஞ்சிதமலர், யோ. வசந்தி ஜே. கிறீஸ்டோபர், அ. ரஞ்சன், நி. மன் ஆகியோருக்கு எனது உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும் விசேட ஒறுத்தல், சுரண்டல் சுட்டது போன்ற உருவகக் கதைகளைப் படைத்த நிலான் சந்தாம்பிள்ளை அவர்கட்கும் எனது நன்றிகள்.

மேலும இவர்களது படைப்புக்களை தங்களது பகுதியில் என் போன்ற இளைஞர்களுக்காக மலர விடும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

இங்ஙனம்
அன்பு இளம் உள்ளம்
M. ஜோண் பற்றிக்

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு—46

அடைக்கலம:- இப்ப எல்லாம் சட்டை மாத்திறமாதிரி எல்லோ சமயம் மாறுதுகள் பாத்தியாண்ணே.

குருசு:- இவையளப் பற்றி கவலைப்படாத தம்பி இவையள் எல்லாம் அரசர்காலத்து ஒற்றர்கள் மாதிரி உளவு பாக்கவெல்லோ போகினம்.

அடைக்கலம:- புதுசா போறவையள் தானே பெரிய பக்தியா திரியினம். போதிக்கவும் பிறகு வருகினம்.

குருசு:- சாத்தானும் வேதம் ஓதுற சரித்திரம் தெரியாதே தம்பி இப்ப அரசியல் மாதிரி கட்சி மாறியவையள கொண்டுதான மற்றையவளை மடக்க நினைச்சினம். ஆனா புது துடைப்பம் நல்லா கூட்டும். தெரியும்தானே. பிறகும் ஒற்றர்கள் தம்முடைய குணத்தைக் காட்டி சட்டை மாத்தேக்கதான் புலப்படும். அதுவரை பொறுத்திருந்து அற்ப விசுவாசிகளை இனம்கண்டு கொள்ளன்.

## இன்று நாமும் நமது வாழ்க்கையும்

20 ஆம் நூ. ஆண்டின் உலகமானது விஞ்ஞான மயமாகிக் கொண்டிருக்கும் காலகட்டத்தில், கிறிஸ்துவை எமது வாழ்வின் ஆதாயமாக்கிக் கொண்டு வாழ்கின்ற கிறிஸ்தவர்களாகிய நாம் சற்று நமது அன்றாட வாழ்க்கை எவ்வாறு செல்கின்றது என்பதைப் பற்றி சிந்திப்பதில் கடமைப்பட்டிருக்கின்றோம். லௌகீக வாழ்க்கையில் எமது காலத்தைவீணே செலவழித்து உலக இன்பங்களில் நீந்தி இன்பம் காணும் நாம், சற்றேனும் நமது ஆன்மீக வாழ்வைப் பற்றி சிந்தித்து பார்ப்பதுண்டா? எமக்கு மறுவுலக வாழ்வு ஒன்று உண்டு என்பது நிச்சயம். நாம் இவ்வுலகில் செய்யும் செயற்பாடுகள் தான் எமக்கு மறுவுலக வாழ்க்கையை நிர்ணயிக்கும் மூல காரணிகளாகும. நாம் எந்தளவிற்கு எமது வாழ்க்கையை மாற்றி அமைத்துக்கொளகி

S செல்வக்குரு
புனித. மடுத்தினார் குருமடம்.
யாழ்ப்பாணம்.

றோம்? எமது வாழ்க்கையைப் பற்றி பிறர் எடுத்துச் சொன்னாலொழிய எம்மைப் பற்றி ஒன்றும் எமக்குத் தெரியாது. இன்றைய எமது சமுதாய வாழ்க்கையை ஆராய்ந்தால் எத்தனையோ மக்கள் தமது கடமைகளை மறந்து செயற்படுகின்றார்கள் என்பது வெள்ளிடைமலையாகும்.

தினமும் கோவிலிலே கூடுகிறோம். வழிபாடுகளை நடத்துகிறோம். கடவுளே என்று இறைவனை அழைக்கின்றோம். ஆனால் அயல் வீட்டுக்காரனுடன் கதைப்பது கிடையாது. சிறிய விடயங்களிற்கும் அயலவரைப் பகைக்கின்றோம். பகைவரை அன்புசெய்ய மறுக்கிறோம் எமக்கு பிடித்தவர்களை மட்டுமே அன்பு செய்கிறோம். உண்மையான அன்பு எபமிடம் இல்லாதபோது கடவுளே என்று அழைத்தால் என்ன பயன்? கண்ணால் காணும் சகோதரனை அனபு செய்யாத நாம் கண்ணால் காணமுடியாத கடவுளை எவ்வாறு அன்பு செய்ய முடியும்? திருச்சபை ஞாயிறு பூசைகளில் கட்டாயம் அனைவரும் பங்குபெறவேண்டும் என கூறுகிறது. ஆனால் நம்மில் பலர் வேலைத்தளங்கள் சென்று பணம் சம்பாதிப்பதில் ஈடுபடுகிறார்கள். மாணவர்கள் ரீயூசன் என்ற போர்வையில் பூசையை கட்பண்ணுகிறார்கள். இவர்களுக்கு உலகம் தான் பெரிது. ஆனால் உலகைப் படைத்த இறைவனை வணங்க மனம் இல்லை.

(தொடர் அடுத்த இதழில்)




## வாசகர் கருத்து

சீதனம் வாங்குவது ஆண்கள் தான் என்று ஆண்வர்க்கத்தை ஒரேயடியாக குற்றம்சாட்டியுள்ளது 26/3 அன்று பாதுகாவலன் 'குடும்பம் ஒரு கதம்பம்' அது தவறு, மகனுக்கு அதிகம் சீதனம் வேண்டும் என்று கேட்கும் மாமியாரும் பெண்தான், அந்த சீதனங்களை எதிர்பார்க்கும் நாத்தனார் (மச்சிமார்) களும் பெண்தான். இவர்கள் தாங்கள் என்ன கொண்டுவந்தோம் என்று யோசிப்பதில்லை, (சிலமாமிக்கள்) அப்படி கொண்டுவந்தாலும். இந்தக்கால சூழ்நிலையில் யார்தான் பொருள் சேர்க்க முடியும்.

சில இடங்களில் மணப்பெண்கள் கூட மாப்பிள்ளை வீட்டாரை பொருள்கேட்கத் தூண்டுகிறார்கள். மூத்தவர்கட்கு, காணி, பூமி நகை கொடுத்தார்கள் நான் என்ன வெறுங்கையுடனா போக என்கிறார்கள். முன்பு, வசதியுடன் இருந்த பெற்றோர் இருந்ததை கொடுத்தார்கள். தற்போதைய நிலைமையை அவர்கள் யோசிப்பதில்லை, (இது எங்கள் வீட்டில் நடக்கிறது) இந்த மாதிரியான மனநிலையால் பெண்களின் பங்கு சீதனப் பிரச்சனையில் அதிகம் என்கிறேன்.

பொருளில் பிரியம் பெண்களுக்குத்தான். மற்றவர்கள் தன்னை மதிக்கவேண்டும் என்ற அசட்டுக்கர்வம், செருக்கு, அதிகம். (எல்லாப் பெண்களையும் இப்படிச் சொல்லவில்லை.)

பாரதி சொன்னான். ஆணுக்கு, பெண் சமம் என்று இதனால் இளைஞர்கள், யுவதிகள் சபதம் எடுக்கவேண்டும் சீதனம் வாங்கவோ, கொடுக்கவோ கூடாது என்று அன்புக்கு முதல் இடம் கொடுத்தால், குடும்பம் ஒரு கோயில்.

இ. அல்பிறட் குரூஸ்
அரிப்பு

தந்தை தாய் பிரச்சினைகள் காரணமாக பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையிலும் பிளவுகள் பிரச்சனைகள் தோன்றுகின்றன. பெற்றோர்களிடமிருந்து பிள்ளைகள் கற்றுக்கொள்கின்றனர். தகப்பன் குடிவெறிகாரணமாக தாயை வந்து உதைக்கின்றார் இதே செயல்தான் நாளைய அவனின் மகனின் வாழ்க்கையிலும். எனவே நீங்கள் முன்மாதிரியாக வாழுங்கள். நல்ல பரம்பரையை நிலைநாட்ட இதுவே முக்கியகாரணமாகும்.

இன்றைய குடும்பங்களில் நடப்பது என்ன தாய் ஒரு வீடு தந்தை ஒரு வீடு காரணம் கேட்டால் அவள் கெட்டவள் அவன் கெட்டவன். இதுதானா? இன்பவனத்தில் இறைவன் உருவாக்கிய பரிசுத்தமான திருமணவாழ்க்கை இவ்வாறான பரிசுத்த திருமணவாழ்க்கையையே இவர்களால் ஒட்டறைகளாக்கி கறைபடுகின்றது. இப்படிப்பட்டவர்கள் ஏன்தான் திருமணவாழ்க்கையலே ஈடுபட்டவாகளோ என்ற கேள்விக்குறிதான் எழுகின்றது.

மீசை நரைத்தாலும் ஆசை நரைக்காது என்பார்கள். இது எந்தளவிற்குப் பொருந்துகிறது. பத்தும் பெற்று பல்லாண்டு வாழ்க! இது வாழ்த்தல்ல இது எச்சரிகை ஆனால் குழந்தைகளின் தொகை பெருக வாழக்கையிலே வெறுப்பு இந்தக் குழந்தைகளின் நிலை என்னவது? அனாதை மடங்கள ஆச்சிரமங்கள் இவர்களன் எதிர்காலம். ஆகவே பெற்றோர்களே மணமாகவிருக்கும் சகோதரங்களே சிந்தித்துச் செயற்படுங்கள்

குடும்பவாழ்வு பல மணிகள தொடுசகப்பட்ட சங்கிலி போன்றது. அது அறுந்தால் மணிகள் சிதறிவிடும். ஆம் இதே போன்றுதான் குடும்பவாழ்க்கையும குடும்பத்தில் பிளவுகள் இன்றி பெற்றோர்கள் விழிப்பாக செயற்பட வேண்டும். பிள்ளை வயதிற்கு வந்து விட்டது. அதைக்கண்டிக்கக் கூடாது என்பதால் நீங்கள் திருப்திப்படமாட்டீர்கள் பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்று விட்டுவிடக் கூடாது. எதிர்காலத்தில் பிள்ளை "துள்ளிக்குதிக்கும் என் துடுக்கை அடக்கி பள்ளிக்குப் போ என்று சொன்னார்களா? என் பாதகமான பிதா மாதா" என்று கண்ணீர் விடாமல் காப்பாற்ற வேண்டியது உங்கள் தலையாய கடமை என்பதை எந்நாளும் நினைத்திடுங்கள்.

மரியாம்பிள்ளை ஆரோகணம்
D- 8 கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் வாக்கு அறிவோம்

திருமறைப்பணி நிலையம், ஆ. பெ. இல. 2. யாழ்ப்பாணம்

## சிறிய இறைவாக்கினர்-32

### ஆகாய்- 2

இறைவாக்கினர் ஆகாய் வலியுறுத்தும் ஓர் கருத்து இறைவனது காரியங்களுக்கு முதன்மை அளித்தல் யூதர்களில் பெரும்பாலானோர் வறுமையில் வாடினர். அவர்களது வறுமைக்குக் காரணம் ஆலயம் கட்டுவதில் அவர்கள் காட்டிய அக்கறையற்றதன்மையாகும் என்பது ஆகாயின் கருத்து.

மக்கள் தங்கள் வாழ்க்கையைப் பற்றியே அக்கறை கொண்டனர். இறைவனை மகிமைப்படுத்துவதைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை. தலையானவற்றிற்கு முதன்மை அளிக்கத் தவறினர். ஆகவே அவர்கள் விரும்பிய பொருளாதாரத்தை அடையத் தவறினர். "உங்களுக்கு நிகழ்ந்திருப்பதை நினைத்துப் பாருங்கள்" (1 : 6 - 7) அறுவடை மோசமாயிற்று, பொருள்களுக்குத் தட்டுப்பாடு என்று ஆகாய் நினைவூட்டுகிறார்.

இறைவழிபாட்டிற்கும்- பொருளாதாரவளமைக்கும், தொடர்பு இருக்கிறது என்ற கருத்தினை ஏற்றுக்கொள்வது இக்கால மனிதர் சிலருக்குக் கடினமாக இருக்கலாம் வழிபாட்டில் இறைவனை ஏற்றுக்கொள்வதற்கும், மனுக்குலத்தின் பொருளாதாரச் செழிப்புக்கும் இடையே உண்மையான அடிப்படைத் தொடர்பு உண்டு. இறைவழிபாட்டிலிருந்து மனிதன் விலகிச் செல்லும்போது அவனது மனிதத்தன்மை பாழ்படுகிறது. சமூகம் அழிகிறது, பூமியோடு அவன் கொள்ளும் உறவு சீர்குலைகிறது. பொருளாதாரம் பாதிப்படைகிறது, ஆதியாகமத்தில் கூறப்படுவதுபோல மனிதன் இறைவனுடன் கொண்ட உறவை முறித்ததால் இயற்கை படைப்பு பயனற்ற நிலைக்கு உட்பட்டது. மக்கள் இறைவனுடைய மேலாண்மையை ஏற்று அதற்கேற்ப வாழும்போது பூமி இன்பவன நிலைக்கு ஒத்ததாகிறது. இக்கருத்தை ஆகாய் வலியுறுத்துகிறார்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞான முன்னேற்றம் அடைந்திருந்த போதிலும், பல கோடி மக்கள் வறுமையில் உழல்கின்றனர். பசியாலும், பிணியாலும் வருந்துகின்றனர். எக்காலத்திலும், இல்லாத விதத்தில் இலௌகீக, பொருளாதாரம் சார்ந்த காரியங்களில் மூழ்கிப்போன இக்காலத்தில் வறுமை எங்கும் பரவிக்கிடைப்பதையும், தேவைகள் மிகுந்து கொண்டே போவதையும்தான் காணமுடிகிறது. இறைவாக்கினர் ஆகாய் கூறும் படிப்பினை இக்காலத்திற்கும், ஒத்ததாக இருக்கின்றது. முதலானவற்றிற்கு முதலிடம் கொடு. மனிதனுக்குத் தேவையான மற்றவைதானாக வந்துசேரும் என்கிறார். இயேசுவின் போதகத்திலும், இக்கருத்தைக் காணமுடிகிறது

"இறைவனின் அரசையும் அவருக்கு ஏற்புடையதையும், முதலில் தேடுங்கள். இவையனைத்தும் உங்களுக்கு சேர்த்துக் கொடுக்கப்படும்!

இ. சா. பங்கிராஸ்

**அறிந்துகொள்ளுங்கள் 88**

## பாலாம் குறி சொல்லுதல்

இஸ்ராயேல் மக்கள் தங்கள் விடுதலைப் பயணத்தின்போது ஏதோம், மோவாபு, அம்மோன் ஆகிய நாடுகளில் புகவில்லை, இவர்களோடு போராடுவதை விரும்பவில்லை. ஏனெனில் இவர்கள் ஒருவகையில் இஸ்ராயேலருக்கு உறவினர்கள் மோவாப்பியரின் தந்தை மோவாப்பும், அமோறையரின் தந்தை அம்மோனும் லோத்தின் இரு புதல்விகளுக்கும் லோத் மூலம் பிறந்த புதல்வர்களாவர் (ஆதி 19:37-38) லோத் ஆபிரகாமின் சகோதரனின் மகன் (ஆதி 12:5) ஏதோமித்தரின் தந்தை ஏசாயு இவன் ஈசாக்கின் மூத்தமகன் யாக்கோப்பின் சகோதரன் (ஆதி. 25:24 26) எனவே இவர்கள் இஸ்ராயேலரின் உறவினர்கள். அவர்களோடு இஸ்ராயேலர் போரிட விரும்பவில்லை மோயீசன் அமோறையரின் அரசனுக்கு தூது அனுப்பி அவர்கள் நாடு வழியாகக் கடந்து போக உத்தரவு கேட்டனர். ஆனல் அமோறையரின் அரசன் செகோன் இஸ்ராயேலரின் தூதுக்கு செவி கொடாது படையெடுத்து அவர்களை எதிர்த்தான் ஆனல் இஸ்ராயேலர் அவன் நாட்டைப் பிடித்தனர். இப்படியாக அவர்கள் பல நாடுகளை வெற்றி கொண்டு மோவாப் சமவெளியில் பாளையம் இறங்கினர்கள்.

அமோறையர் மேல் இஸ்ராயேல் கொண்ட வெற்றி மோவாபு அரசனை பாலாக்கை அஞ்சச் செய்தது. ஆனல் அவன் இஸ்ராயேலருடன் போர் புரியவில்லை. மாருக இஸ்ராயேலருக்கு இயற்கைக்கு மேலான ஒரு ஆற்றல் செயல்படுவதாக உணர்ந்தான் எனவே அவர்களை சாபங்களாலும் மந்திரங்களாலும் அடக்கிக்கட்டுப்படுத்த விரும்பினன். எனவே அம்மோன் நாட்டைச் சேர்ந்தவனும் பேயோரின் புதல்வனும் குறி சொல்வதில் வல்லவனுமாகிய பாலாமை இஸ்ராயேலரை அழிக்க ஆற்றல் மிக்க சாபங்களை சொல்லுமாறு கேட்டுக் கொண்டான் (எண் 22:5 -)

பாலாம் யாவே தான் இஸ்ராயேலரைச் சபிப்பதை தடுக்கிறர் என்பதை உணர்ந்து மோவாப்புக்கு போக மறுத்து விடுகிறன் (எண் 22:12-14) பலாக் அரசன் பாலாமுக்கு இரண்டாம்முறை தூது அனுப்பி வருந்தி அழைத்தான் பாலாம் மோவாப் சென்றன் அவன் வாயினின்று சாபமொழிக்குப் பதில் ஆசீரே புறப்பட்டது.

(தொடரும்)

இ. ம. ஜெயசீலன்

## பழமொழி ஆசமும் முதுமொழியும்.

வாசக நேயர்களே!

இன்று எம் மத்தியிலே உண்மைக்கும், நீதிக்கும், மனச்சாட்சிக்கும் மக்களோ, தலைவர்களோ செவிசாய்ப்பதில்லை காரணம்- உண்மைக்கு செவிசாய்த்தால் அவர்களின் நீதி மக்கள் மத்தியிலே பயனற்றதாகிப் போய்விடும் என்ற ஒரு கர்வம்!

மனவேதனைகளினல் தன்னுள்ளம் நைந்துபோன ஒருவன், தனக்கென்று இருக்கின்ற ஒரே தலைவனிடம் ஆலோசனை கேட்கப் புகுந்தால் தனது சுயகௌரவத்திற்காக அவனை தட்டிக்கழிப்பதும் உண்டு. இது- உங்கள் வாழ்விலும். நடைபெற்றுக்கொண்டு தானே இருக்கின்றது!

உண்மை நிலை அறியாத நம் தலைவர்களுக்கு திருநூல் ஆசிரியர் மனச்சாட்சியை தூண்டிவிடக் கேட்கிறர்- இப்படி!

"விவேகமான அறிவு-ஞானத்தை அளிக்கும்! ஞானிகளோ போதனைககுச் செவிசாய்க்கிறர்கள்" என்று 18/15 இல் கூறுகிறர். இப்படி வாழுகின்றவர்களுக்கு கவிஞரின் கண்டனமொழி- "சட்டம் ஏமாந்து போனலும் போகும்- தர்மம் எப்போதும் பழிவாங்கித்தீரும்" அளவு உள்ளவர்கள் தொப்பியைப் போட்டுக் கொள்ளுங்களேன்!

இன்னென்றை யோசிப்பீர்களா? இக்காலக் கவிஞன் இயற்றுகின்ற பாடல்களில் சில வரிகள் இதோ!

கோட்டுக்குத் தேவை சில சாட்சி!

உன் குணத்திற்கு தேவை மனச்சாட்சி"!

உண்மை தானே நேயர்களே!

சாட்சிகளைவிட மனச்சாட்சி என்று ஒன்று இருக்கின்றதே அது நாம் வெளியில் எதைச் சொன்னலும், நாம் சொன்னது தப்பு என்று அடிமனத்திலே இடித்து உரைத்துக் கொண்டு இருக்கும்!

இப்படி போலி வேஷம் போடுகின்றவர்களை திருநூல் கண்டித்து- 18/18 இல்

"திருவுளச்சீட்டு பிடிவாதங்களை அடக்குகின்றது. அது வல்லவர்கள் மத்தியிலுங் கூட நியாயந் தீர்க்கின்றது"

பொருத்தம்- பொருத்தமா?

### வாரம் ஒரு சிந்தனை

"ஏன் இந்தப் புன்னகை? உன்னை மயக்கவோ கவனமாயிரு!

உங்கள் அன்பன்
எஸ் ஏ. நாதர்.

## ஊக்குவியுங்கள் வாசகர்களே!

பாதுகாவலன் பத்திரிகையை உங்கள் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" நீங்கள் அறிமுகப் படுத்தாமல் எப்படி மற்றவர்கள் அறிய முடியும். மறை வட்டத்திலுள்ள அனைத்துக் கத்தோலிக்க குடும்பங்களும் வாரம் தவருது பாதுகாவலன் வாசிக்கப் பழகிக்கொள்ள நீங்களே துணைபுரிய வேண்டும்.

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 3<br>சுடர்: 32 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

### வாரம் ஒரு வார்த்தை:

நன்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள்;
நீதியைத் தேடுங்கள், ஒடுக்கப்பட்டவருக்கு
உதவி செய்யுங்கள். திக்கற்ற பிள்ளைக்கு
நீதி வழங்குங்கள். கைம்பெண்ணுக்காக
வழக்கு நடத்துங்கள். இசை 2: 17

★ ★ ★

### புனித தோமஸ் அக்குயினஸ்

"ஒரு கிறிஸ்வனுடைய வாயிலிருந்து பொய்கள் வரும் என்று நினைப்பதைவிட எருது பறக்கிறது என்று விசுவசிப்பது எளிது" என்று கூறினர்.

### குற்றச் செயல்கள்

எம் ஈழத்திரு நாட்டில் அன்புக்கு அத்திவாரம் இட்டு, அன்பு வழிகாட்டும் நான்கு சமயங்கள் உண்டு. பாடசாலைகளில் சமயங்கள் போதிக்கப்படுகின்றன. சமய விழாக்கள் வருடம் தவறாமல் கொண்டாடப்படுகின்றன. அதேவேளை குற்றச் செயல்களும் நாளும் பொழுதும் பெருகிச் செல்கின்றன ஏ இவை பெருகிச்செல்கின்றன? என்பதற்குரிய காரணங்களை சுருக்கமாக எழுதி அனுப்புங்கள்.

### மன்னர் மக்களின் இதயம் கவர்ந்தவர் கல்விக்கடலில் கலங்கரை விளக்கு

புனித டிலாசால் சபையின் அருள் சகோதரர்
ஹில்லறி யோசவ் அவர்கள் நினைவு:

மன்னர் மக்களின் நல்வாழ்விற்காக தன்னையே அர்ப்பணித்த தன்னிகரில்லாத் தலைவன், சிறந்த கல்விமான் கலைப்பட்டதாரி (லண்டன்) யான இவர் பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கல்வி டிப்ளோமா பட்டத்தையும் பெற்றர். மன்னர் புனித சவேரியார் கல்லூரியின் அதிபராக இருந்து கல்லூரியைக் கண்ணின் மணிபோல் காத்து வளர்த்த, கலைமகன், சரியெனப்பட்டதை துணிவுடன் செய்த செயல் வீரன், கடமை கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றிற்கு முன்னுரிமை கொடுத்த கடமை வீரன்.

இவரது சேவைக்காலத்தில் கல்லூரியை மன்னர் மாவட்டத்திலேயே சிறந்த கல்லூரியாக உருவாக்கினர். க. பொ. த. உயர்தர வகுப்புக்களை உருவாக்கி பாடசாலையின் தரத்தை உயர்த்தினர். கட்டிட வசதிகள், விஞ்ஞான தொழில் நுட்ப ஆய்வு கூடங்களை உருவாக்கினர், புனித டிலாசாலைப் போன்று ஏழை மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு முன்நின்றுழைத்தார். மன்னர் மறைமாவட்டத்தில் புதியகுருக்கள். துறவிகள் உருவாகுவதற்கு ஊக்குவித்துள்ளார். குறிப்பாக பாடசாலையைவிட்டு வெளியேறிய மாணவர்களின் நலன் கருதி தொழில் நுட்பகூடம் ஒன்றையும் நிறுவியுள்ளார். இவர் கல்விக்கு மட்டுமல்ல சமய சமூக சேவைகளிலும் சிறந்து விளங்கியதுடன் மன்னர் மக்களின் நெஞ்சங்களில் இரண்டறக் கலந்துவிட்டார்.

இவரது சேவைகளையும் நற்பண்புகளையும் நினைவுறும் இவ்வேளையில இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காகவும் இறைவனை இறைஞ்சுவோமாக.

G: செபஸ்தியாம்பிள்ளை அங். எண். A/18.

### அங்கத்துவம்

199 ச. ஜக்குலின் 6 பருத்தித்துறை, மெதடிஸ்ற் பெ. உ. க.
200 P. அனற்ரு சுஜானு 9 நாளுட்டான், ம. வி.

### இயற்கையூடே இறைவனைக்காண்

இயற்கையிலே இறைவனைக் கண்டு
இயங்கிடும் நம் வாழ்க்கையிலே,
இறை படைத்த படைப்பை—நாம்
இறைவனென இறைஞ்சலாமா? இல்லை.

பண்டத்தினைக் கொண்டு—அதன்
பயனினைக் கூறலாம்—அவ்வாறே,
படைப்பினைக் கொண்டு—நாம்
படைத்தவரைப் பார்த்திடலாம்.

இயற்கையிலே இறைவனுண்டு—தவறு
இதில் இல்லையப்பா;—இருப்பினும்
இயற்கையூடாக இயக்குபவனை
இனங்காண்பதே சரியப்பா.

சே. அன்புராஸ் அ. எண்: 56.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா? போட்டி -27

### வினாக்கள்

பாதுகாலன் பத்திரிகையில் இதழ் 26-தொடக்கம் இதழ்-30 வரை வினாவுக்குரிய சரியான விடையைக் கண்டுபிடித்து வினா இலக்கத்தையும் சரியான விடையையும் தெளிவாக எழுதி 5-10-89இற்கு முன் பாதுகாவலன், அ. பெ. இல-2. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். விடையும், பரிசு பெறுபவர் பெயரும் அடுத்தபோட்டியும் 20-10-89ல் வெளிவரும். பரிசு ரூபா 25/-

1. மோயீசனின் சகோதரன் ஆரோன் செய்துவந்த வேலை என்ன?
2. பாரீஸ் நகரத்தில் நடைபெற்ற சர்வதேச மனித உரிமைகள் ஒன்றியத்தின் கூட்டத்திற்கு அழைக்கப்பட்ட நடிகையின் பெயர் என்ன?
3. ''நியூ லீடர்'' என்ற ஆங்கிலக் கத்தோலிக்க பத்திரிகை எங்கிருந்து வெளியிடப்படுகிறது? இதன் ஆசிரியர் யார்?
4. ''நல்லாயன் கன்னியர்'', ''யேசு மரி'' என்ற சபைகளை ஸ்தாபித்தவர் யார்?
5. அகதிகளுக்கு புனர் வாழ்வு அளிக்குமுகமாக அ ம.தி. சபையினர் கானகத்தில் உருவாக்கிய சபையின் பெயர் என்ன?
6. முரடனுக்குக்கூட 'இது' இருக்கிறது அது எது?
7. ''ஆண்டவனின் குரல்'' என்று நாம் எதனை அழைக்கின்றோம்?
8. அமல மரித்தியாகிகள் சபையின் சிரேஷ்டர் யார்?

## உங்களுக்குத் தெரியுமா போட்டி 26இன்

### சரியான விடைகள்

(1) கிளாங்கோ நகரில், 1928இல் நிறுவப்பட்டது. (2) ஸ்கண்டி நேவிய நாடுகள் (3) 41வது பயணம் (4) டாக்டர் கோபால்சிங், கோவாமாநில ஆளுநர் (5) எம். விக்டர் (யாழ் ஜெயம்) 18.6.89இல் யாழ். மறைக்கல்வி நிலையத்தில் நடந்நது. (6) ஸ்டெபனி கோட்டின் டி பிகாட் (7) பன்சாய் யாய், (8) அருள்திரு பிற்றர் ஹானஸ் கோலவன் பக்

பாராட்டுப் பெறுவோர்

அ. தேவன் உதயா, வீ. றீ. சுகந்தராஜ், ம, ச. உதயசோதி, பிரியாந்தி பாலச்சந்திரன், அ. பு. றெஜி விஜிதா, A. புஸ்பராசா, யூட் றஜிதா, மேரி சுஜிதா, S. வளர்மதி, அலன் மிலர், யேம்ஸ் பொனிபஸ், ம. மைக்லேல் யூட், நிலாந்தி பாலச்சந்திரன், அ. திலீபன் யேசுதாசன், செ. றெஜிக்குமார், அ. அன்ரன் அருந்தவராஜா, S.அன்ரன் யூட் ரவி, பி. யோசவ், D. றேய்றேச், D. லக்ஸ்மன் றேச், இ. எறிக்யோசவ், க. வில்சன் சிங்கராயர், அ, அதிரியான் சோசை, வனசா அந்தோனிப்பிள்ளை, ப. மக்ஸ்மலா, ம. இம்மானுவேல் ஹவ்வல், M. சுதர்சன் ஹெவ்வல், த. ஜெகன் டலிமா, K. பேர்டினன்ட், க. கிறிஸ்ரீனு டலிமா, க. திலகா டலிமா, தே. சியாமினி, நே. சுசிகரன், வி. இன்பழகி, கரோலின் ராஜசிங்கம், தீபன் அன்னம்மா குலாஸ், தீபா மடோனுசொய்சா, ஜே. அகிலன் M, ராஜன் குலாஸ், அ. மரியதாசன் குலாஸ், அ. விஜேதினி, ம. ஜனுத்தனன், கொ. சுகந்தினி, யோசப் நிக்கலஸ் றெசான், அ. ஜெயா மேரி சொய்சா, S. ஜோண்மேரி, அமல் டினேஷ் கூஞ்ஞு, இ. எமில் யோசப், அமல்ராஜ் சந்தியாப்பிள்ளை, நெல்சன் சூசைப்பிள்ளை, அ. யூட்மன், ம. மஜேயினி, தே. ஜெனி அ. அமல்ராஜ், தே. ஸ்ரனிஸ்லஸ், அ. நந்தினி, பே. வினித்தா, ப. றயனி, கி. தயா, பி. ஜெயறுணி, பு. பிறேமா, பா. புஸ்பா, அ. விஜயரத்தினம், அ. சாந்தினி, அ. மோசேஸ், மேரிறுபினு சபாநாயகம், சூ. நெவிசி, M. R. தர்சன், பொ. அன்ராயூட், அனுஷா றீற்றஸ், R. மாலா குலாஸ், அ. மரிஸ்ரெலா, S. பிறேம் குமார், சி. ஜீன், அகஸ்ரீன்யூட் அல்வின் S. யேன் பமிலா, எ. திரேசிற்று அருள்மணி, குஞ்சு ஜே கீதாஞ்சலி சொய்சா அ. வில்சன் போல், T. சந்திரனே,

பரிசுபெறும் நற்பேறுளர்:-

செல்வி:- சூ. யோசவீன் தேவராணி (றதினி)
முதலை குத்தி, உயிலங்குளம்

## முகமாலை புனித ஆரோக்கியமாதா

முத்திற் பிறந்த முழுவைர மாமணியே !
பத்தரை மாற்றுப் பசும்பொன்னே ! – எத்திசையும்
போற்றும் புகழ்விளக்கே ! பொன்னுருவே ! பூம்பதமே !
ஏற்றம் தந்தெமைக் கார் !

பொற்பதியில் பூத்திருந்து ! பொன்கரத்தால் ஆசியீந்து !
பக்குவமாய்ப் பேணிவரும் பரிசுத்த காவலியே !
வெற்றி நாயகியே ! வேளாங் கண்ணியம்மா !
வேண்டுகின்ற எங்களது வேதனைகள் தீருமம்மா !
கற்பகமே ! எங்கள் கன்னிகா ரத்தினமே !
கதிகலங்கும் இவ்வேளை கைகொடுத்துக் காருமம்மா
அற்புதமே ! பொற்பதமே ! ஆரோக்கிய உற்பவமே !
ஆதரவு தந்தெம்மை ஆதரிப்பாய் நித்தியமே !

அன்னையின் அடியாள்
மிருசுவில்.

## 21-வது வருட நினைவு தினத் திருப்பலி



அருள் தந்தை

பியோ

தோற்றம்; 25-5-1887 மறைவு: 23-9-1968

முத்திப்பேறுபெற்ற பட்டம் கிடைப்பதற்காக ஒப்புக் கொடுக்கப்படும் திவ்விய பலிபூசைகளில் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

1. புனித யுவாலியார் ஆலயம், யாழ்ப்பாணம் 19-9-89 காலை 6 மணி.
2. புனித அந்தோனியார் ஆலயம், பாஷையூர் 20-9-89 காலை 6 மணி.
3. புனித யாகப்பர் ஆலயம், யாழ்ப்பாணம் 21-9-89காலை 5-30 மணி.
4. புனித யூதாததேயு ஆலயம்,அரியாலை 21-9-89 காலை5மணி.
5. புனித மரியன்னை பேராலயம், யாழ்ப்பாணம் 22-9-89 மாலை 5-30 மணி.
6. புனித அடைக்கலநாயகி ஆலயம், யாழ்ப்பாணம் 22-9-89 மாலை 5-15 மணி.
7. புனித அன்னம்மாள் ஆலயம், பண்டியந்தாழ்வு 23-9-89 காலை 6-15 மணி.
8. அருள் ஆச்சிரமம், யாழ்ப்பாணம் 23-9-89 காலை 6 மணி.

அருள்திரு. பியோ அவர்களின் செபவழிபாடுகளில் பங்குபற்றி நாட்டின் சமாதானத்துக்காகவும் உங்கள் தேவைகளுக்காகவும் மன்றுடும்படி கேட்டுக் கொள்கிறோம். அவர்களின் முத்திப் பேறுபெற்ற பட்டம் அவர்களுக்கு விரைவில் கிடைப்பதற்கு உதவியாக நீங்கள் அவர்கள் மூலம் பெற்றுக்கொண்ட நன்மைகளை பின்வரும் விலாசங்களுக்கு அனுப்பி வைக்கவும்.

விலாசம் (1)
நம் 1 சென் யூட்ஸ் அவனியூ.
அரியாலை.

(2)
392, பிர்தான வீதி,
யாழ்ப்பாணம்.

## விண்ணகப் பிறப்பின் 31-வது நாள் நினைவு



சலமோன் இராசேந்திரம்
மண்ணில் 1931-03-24 விண்ணில் 1989-08-18

''நாம் அனைவருமே சாகமாட்டோம் ஆனால்
அனைவருமே வேற்றுருப் பெறுவோம்'' (1 கொரி 15: 5.)
கல்லறையில் உனை வைத்து
கண்ணீரால் மூடிவிட்டு
கரைசேராக் கப்பல் போல்
கலங்கித் தவிக்கின்றோம்
கண்மணியாய், கண்ணியமாய்
எமை வளர்த்து—இன்று
கதறி அழ வைத்ததேன்- ஐயா
கத்தரின் காலடியில்
நீ களிகூரும் இவ்வேளை
கசிந்துருகி எமக்காக
வேண்டும் ஐயா.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 18 09-89 திங்கள் காலை 6-30 மணிக்கு மல்லாகம் புதுமை மாதா ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் படும்.


இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், சகோதரர்
தேவாலய வீதி, மல்லாகம்.

## தியாக்கோன் பட்டம்

திருவுளப்பணியோர் சபையைச் சேர்ந்த அருட் செல்வன் லாசர் செபஸ்ரீயான். குரூஸ் என்பவர் 25-09-1989 தினம் அன்று யாழ் பேராலயத்தில் யாழ் ஆயர் அதி வந். வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் தியோக்கோனுக திருநிலைப் படுத்தப் படவுள்ளார். இறைவன் அவருக்களித்த இம்மாபெரும் கொடைக்கு நன்றி செலுத்துவோம்.

திருவுளப்பணியோர் சபை
முகமாலை

## மூன்றும் ஆண்டு நினைவு நாள் 18–9–89



திரு. ம. மரியாம்பிள்ளை

இறைவன் இவர் மூலம் இல்லத்துக்கும் உலகத்துக்கும் செய்த நன்மைகளுக்காக 18-9-1989 திங்களன்று காலை 6. 15 மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில் நன்றித்திருப் பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

A/202 மனைவி மக்கள்

## ஓராண்டு நினைவு அஞ்சலி



திருமதி. மரியபாக்கியம்
செபஸ்தியாம்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
மலர்வு: 23–6-1923 உதிர்வு: 18–09–1988

ஓராண்டும் ஓடியதே
அம்மா! நின்பிரிவால்
நீராடும் கண்களில்
நிழலாடுதே உன் உருவம்
போராடும் நெஞ்சத்தில்
அணையாத தீபமே!
எம் மரிய பாக்கியமே
இறைவனடி இணைந்திடவே
இறைஞ்சுகிறோம்
நிதம் நிதமே.

இவரின் ஆன்ம சாந்திக்காக (18-09-89) திங்கட் கிழமை காலை 6-15 மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில் இரங்கற்பலி ஒப்புக் கொடுக்கப்படும். என்பதை அன்பு நெஞ்சங்களுக்கு அறியத் தந்து இவரின் ஆன்ம சாந்திக்காக ஒப்புக்கொடுக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
A/193

## 2-ம் வருட மரண ஞாபகம்



ஆ. கிறிஸ்துதாஸ்நாதர்
(தாசன்)
பிறப்பு: 13–3–44 இறப்பு: 21–9–87

மகா இரக்கமுள்ள ஆண்டவரே, நீர் எங்களிடமிருந்து அழைத்துக்கொண்ட உமது தாசனும் எங்கள் தாசனுமாகிய கிறிஸ்துதாஸ்நாதர் உமது நித்திய ஒளியில் இளைப் பாறக் கிருபைசெய்ய வேண்டுமாய் உம்மை உருக்கமாக வேண்டுகிறோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் 21-9-89 வியாழக்கிழமை காலை 6-30 மணிக்கு இரங்கற்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

குடும்பத்தினர்.
சூசானு, மிருசுவில். A/196

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

## மதசுதந்திரத்தைப் பாதுகாக்குமாறு
# திருத்தந்தையின் அறிவுரை

"மதசுதந்திரத்தைப் பாதுகாக்குமாறும், நீதியான தொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புமாறும் உங்கள் நாட்டுத் திருச்சபை அழைக்கப் பட்டுள்ளது."

தம்மைத் தரிசிக்கவந்த பாகிஸ்தான் ஆயர்களுக்குத் திருத்தந்தை இவ்வாறு கூறினார்.

பெரும்பான்மையாக முஸ்லீம்கள் வாழும் நாட்டில் ஆயர்களின் வழிநடத்துதலின் கீழ் வாழ்க்கையின் பரிசுத்தனம் பேணப்படவேண்டிய அவசியத்தை வலியுறுத்திய திருத்தந்தை சமூக, கல்வி, அரசியல் போன்ற ஏனைய அப்போஸ்தலத்துவங்கள் அனைத்தும் இந்த அடிப்படையில் அமைய வேண்டுமென்பதைத் தெளிவுபடுத்தினார்.

முஸ்லீம் சமுதாயத்தின் மத்தியில் ஒரு சிறு சமுதாயமாக இருக்கும் திருச்சபை முஸ்லீம்கள் மட்டில் மிகுந்த அன்பு செலுத்திவருவதுடன், நீதியும் சமாதானமும் உள்ள ஒரு சமுதாயத்துக்கு அடையாளமான மதசுதந்திரத்தையும் மனச்சாட்சிச் சுதந்திரத்தையும் மதிக்கின்ற பண்பை ஏற்படுத்துவதை தனது பணியாகக் கொள்ள வேண்டும் எனவும் திருத்தந்தை குறிப்பிட்டார்.

## நோயுற்ற அன்னை தெரேசா
### இந்தியப் பிரதமருக்கு செபமாலை

அன்னைதிரேசா தற்போது ஓரளவுக்கு உடல்நலம் பெற்று வருகின்றார். பல உலகத்தலைவர்கள் அவர் சீக்கிரத்தில் உடல் நலம்பெறவேண்டும் என செய்திகளை அனுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியும், அவரது மனைவி சோனியா காந்தியும், நோயுற்றுள்ள அன்னைதிரேசாவை மருத்துவமனையில் சென்று தரிசித்த பொழுது அன்னைதிரேசா அவர்களுக்கு செபமாலை கொடுத்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெரு நாட்டின் தலைநகரான லீமா நகரில் ஆகஸ்ட் 3-6 ம் திகதிகளில் நடைபெற்ற சர்வதேச சமரச மகா நாட்டில் அன்னை திரேசாவும் உரையாற்றினார்.

நிக்கரகுவாவைச் சேர்ந்த கருதினால் ஒபண்டோ இப்ராவோ, கொலம்பியாவைச் சேர்ந்த கருதினால் லோப்பஸ் தறுஜிவோ ஆகியோர் மகா நாட்டில் சமூகமளித்த பெரியாருட் சிலராவர்.

ஈராண்டுகளுக்குமுன் இது போன்ற ஒரு மகாநாடு பெருவின் மற்றொரு மறைமாவட்டத்தில் நடந்தது. இம் மகாநாடு பெரு ஆயர் பேரவைத் தலைவர் பேராயர் டூராண்டினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

## வத்திக்கான் தடை

சர்வதேச கிறிஸ்தவ இளந் தொழிலாளர் இயக்கத்திற்கு இருந்த அங்கீகாரத்தை எடுத்துவிட வத்திக்கான் தீர்மானித்ததை அடுத்து அத்தீர்மானத்தை புனராய்வு செய்து உரையாடலுக்கு இடமளிக்குமாறு ச. கி. இ. தொழிலாளர் இயக்கத்தின் தலைவர் பீலிக்ஸ் ஓலார்வேஸ் வத்திக்கான் செயலகத்தில் இதற்கும் பொறுப்பாயுள்ள பேராயர் எட்வேட் இட்றிஸ் கசிடியைக் கேட்டுள்ளார்.

மூன்று வருடங்களுக்கு முன் வத்திகான் தன் அங்கிகாரத்தை இந்த இயக்கத்திடமிருந்து எடுத்தபோது சர்வதேசரீதியில் அது தடைசெய்யப்பட்டது. ஆனால் மறைமாவட்டரீதியில் ஆயரின் அங்கீகாரத்தைப் பெற்று அது இயங்குவதற்குத் தடை இல்லை,

கிறிஸ்தவ இளந் தொழிலாளர் இயக்கம் கருதினால் காடைன் 1925-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

★ செப்டம்பர் 14 நினைவுநாள்

## திருச்சிலுவையின் மகிமை

614 ஆம் ஆண்டளவில் பெர்சியா தேசத்து அரசன் மெசப்பொத்தேமியா மீது படையெடுத்துச் சென்று கணக்கற்ற கிறிஸ்தவர்களையும், குருக்களையும், கன்னியரையும் வதைத்துக்கொன்றான். பல தேவாலயங்களையும் கொள்ளையடித்து இலட்சக்கணக்கான கிறிஸ்தவர்களை அடிமைகளாக்கி யூதருக்கு விற்றான். அத்துடன் யெருசலேமிலிருந்த திருச்சிலுவையையும், எடுத்துக்கொண்டு தனது நாட்டிற்குச் சென்றான்.

கொன்ஸ்தாந்திநோபிளின் புண்ணிய அரசனான ஹெராக்ளியஸ் என்பவர் பல நாட்களாக ஒரு சந்தி உபவாசமாயிருந்து பெர்சியா தேசத்தின் மீது படையெடுத்துச் சென்றார். அவர்களை வென்று 627-ம் ஆண்டு திருச்சிலுவையை அவர்களிடமிருந்து மீட்டு வந்தார். அதை மீண்டும் கபால மலையிலுள்ள திருச்சிலுவைக் கோவிலில் நிலை நாட்ட திட்டமிட்டு 629-ஆம் ஆண்டு குறித்தநாளில் ஏராளமான விசுவாசிகள் ஜெபித்துக் கொண்டும் சங்கீதங்களை பாடிக்கொண்டும், பயபக்தியாய் பவனிவர அரசர் அரச உடைதரித்து திருச்சிலுவையை தோள் மீது ஏந்தி நடக்க முயன்றார். அவரால் நடக்க இயலவில்லை. அவ்வேளை அவருக்கு அருகில் நின்ற ஆயர் சக்கரி என்பவர் அரசனைப் பார்த்து "அரசே, நமது கர்த்தர் நிந்தை அவமானத்துடன் சுமந்துபோன சிலுவையை நீர் அரசனுக்குரிய மேலான ஆடைகளோடு சுமப்பது தகாது" என்றார். அரசன் உடனுக்குடனே தன் அரசாடைகளைக் களைந்துவிட்டு ஏழையின் கோலம் பூண்டு சிலுவையை எளிதாய்ச் சுமந்து கொண்டு போய்த் தேவாலயத்தில் நிலைநாட்டினார்.

திருச்சிலுவை அரசன் ஹெராக்ளியஸினால் மீட்கப்பட்டு கபாலமலையில் நாட்டப்பட்ட திருநாளைக் குறித்து செப்டம்பர் 14 ஆம் நாள் திருச்சபையினால் இந்நினைவு நாள் கொண்டாடப்படுகின்றது.

எஸ். அசிஸ்குமார்.
புனித மடுத்தீனார் குருமடம்,
யாழ்ப்பாணம்.

## சீனாவில் குருமாணவர்களின் உருவாக்கம் பிற்போக்கானது

சீனாவில் குருத்துவக் கல்வி காலத்துக்கோ இன்றைய சமூக நிலைக்கோ ஏற்றதாயில்லை என தென் சீன ஆயரொருவர் ஹொங் கொங்கில் தெரிவித்தார். 1950 களில் இருந்த முறையே இன்னும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறதென்றும் கூறிய அவர் குருமாணவருக்குள்ள பல பிரச்சினைகளை விளக்கினார்.

சீன கலாசாரப் புரட்சியின் போது மூடப்பட்ட குருமடங்கள் 1980-ம் ஆண்டின் பின்னரே திறக்கப்பட்டன. பிரதேசவாரியாக 11 குருமடங்கள் இருப்பதாக சீன கத்தோலிக்க திருச்சபையின் அறிக்கையிலிருந்து தெரியவருகிறது. ஒவ்வொரு குருமடத்திலும் மாகாணரீதியாகவே மாணவர் தெரியப்படுகின்றனர். ஒரு மாகாணத்திலிருந்து அதிக விண்ணப்பங்கள் வந்தாலும் அந்த மாகாணத்துக்குரிய எண்ணிக்கையினர் மட்டும் ஏற்கப்படுகின்றனர். இவ்விதமாக குருமடத்தில் இடம் காலியாக இருப்பினும் எத்தனையோ தகுதியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றனர். வேலை கிடைப்பது இலகுவாக இருப்பதால் இவர்கள் அடுத்தமுறை வரை காத்திராது ஒருவேலையில் அமர்ந்துவிடுகின்றனர் இவ்விதமாகப்பல குருத்துவ அழைத்தல்கள் வீணாகின்றன.

இந்த அழைத்தல்கள் விரைவில் குறைந்துவிடலாம் என ஆயர் அபிப்பிராயப்படுகிறார். குடும்பத்துக்கு ஒரு பிள்ளை என்பது அரசின் கொள்கையாக இருப்பதால் பெற்றோர் தம் ஒரே பிள்ளையை குருமடத்துக்கு அனுப்ப விரும்பமாட்டார்கள் என்று கூறிய ஆயர் மாகாணத்துக்கொரு குருத்துவக் கல்லூரி நிறுவுவதால் பிரச்சினை தீர்க்கப்படலாம் என்றார்.

## இறை அழைப்பு

அறம் தேய்ந்து மறம்பெருகும் இவ்வுலகிலே
அருள் மகன் யேசுவின் தாகமதைத் தணித்திட
அறம் செய்து, செபம் செய்து, தவம் செய்து
அன்புப் பணியாற்றிட அழைக்கின்றார் இறைவன்
ஆம் இன்று உன்னை அழைக்கின்றார்.

இலங்கை, இந்திய நாடுகளில் செபமாலைத் தாசர் (Rosarians) குருக்களாகவும் அருள் சகோதரர்களாகவும் இறை பணியாற்றி வருகின்றனர்.

க. பொ. த. (உ. த.), க. பொ. த. (சா. த.) வகுப்புகளில் படிக்கும், மாண்வர்களும் படிப்பை முடித்தவர்களும் உடனே தொடர்பு கொள்ளவும்,

Director
Arul Ashram
No. 5, Temple Road,
Jaffna.

அதிபர்
அருள் ஆச்சிரமம்
இல. 5, கோவில்வீதி
யாழ்ப்பாணம்.

A/198.

## சாட்டி அன்னை திருவிழா

கொடியேற்றம் : 15 – 09 – 89 மாலை
5 மணிக்கு இடம் பெறும். அதைத் தொடர்ந்து திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

வழிபாடு : 16ம் — 22ம் திகதி வரை
வழிபாடுகள் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்.

இறுதி இரண்டு நாட்கள் வழிபாடுகள்
23 – 9 – 89 : மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும்.
24 – 9 – 89 திருவிழா
திருப்பலி காலை 7 மணிக்கு யாழ். ஆயர் வண. கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் ஒப்புக் கொடுக்கப்படும்.

நன்றி

பங்குத்தந்தை



## ஆரோக்கிய அன்னையின் விழா
### 24-09-1989

(சிற்றாலயம், யாழ். அரசினர் போதனா வைத்தியசாலை)
ஆரோக்கிய அன்னையின் அருள்பெற,
நோயாளர், பணியாளர் அனைவருக்காகவும் வரம் வேண்ட,
ஒத்துணர்வில் ஒன்றுபட வாரீர்!

ஆராதனை நேரங்கள் தினமும் மாலை 5-00 மணி.

| | | |
|---|---|---|
| வியாழன்: | (21 புரட்டாதி—1989) | —ஆரம்ப வழிபாடு. |
| வெள்ளி: | (22 ,, —1989) | —நோயாளர் வழிபாடு. |
| சனி: | (23 ,, —1989) | —நற்கருணை வழிபாடு. |
| ஞாயிறு: | (24 ,, —1989) | —அன்னையின் திருவிழா. |

அன்புடன் அழைக்கும்,
அருள்திரு. மரிய செபஸ்ரியன் அ. ம. தி
(வைத்தியசாலை ஆன்ம குரு)

A/200

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 15-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல: QB/ 1001/ 58/81

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நான் உன்னோடிருக்கிறேன் என்கிறார் ஆண்டவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org